# ரூஹா சுவாச காற்று

காற்று 13 ஆகஸ்ட் 2023 சுவாசம் 09
ஆண்டு சந்தா ₹ 200/- தனி இதழ் ₹ 20/-

*The Lord Shall renew your strength*

## புதுப்பெலன் அடைவாய்



# இதயம் திறந்து உங்களுடன்...



கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான ரூஹா சுவாசக்காற்று பத்திரிக்கையின் வாசகர்களாகிய என் அன்பு சகோதர சகோதரிகளே, ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே உங்களை வாழ்த்துகிறேன். கடந்த ஏழு மாதங்களும் தம்முடைய நீதியின் வலது கரத்தினால் தாங்கி, தமது மிகுந்த கிருபையினால் காத்துக்கொண்ட தேவாதி தேவனை உள்ளத்தின் ஆழத்திலிருந்து துதிக்கிறேன். இந்த எட்டாவது மாதத்தில் அடியெடுத்து வைக்க தேவன் கிருபை பாராட்டியிருக்கிறார். எட்டு என்றாலே புதிய ஆரம்பத்தைக் குறிக்கிறது. **கர்த்தர் தமது புதிய அபிஷேகத்தினால், புதிய ஆசீர்வாதங்களினால் புதுப்பெலத்தினால் நிரப்புவாராக** என்று ஆசீர்வதிக்கிறேன்.

தேவனுடைய பெரிதான கிருபையினாலும் உங்களுடைய ஜெபத்தினாலும் கடந்த ஜுன் மாதத்தில் தூத்துக்குடி பேரின்ப பெருவிழா, துடியலூர் விடுதலைப் பெருவிழாவில் தேவன் மகிமையான காரியங்களையும் அற்புதங்களையும் செய்தார். ஜுன் 19 முதல் 30 வரை ''அநுகூலமான வாசல் திறக்கப்படுவதாக'' என்கிற தலைப்பில் ஒவ்வொரு நாளும் ரூஹா டிவியில் விசேஷித்த உபவாச ஜெபம் நடைபெற்றது. அநேகர் ரூஹா தொலைப்பேசி எண்ணைத் தொடர்பு கொண்டு தங்களுடைய பிரச்சனைகளுக்காக ஜெபித்துக்கொண்டார்கள். கர்த்தர் அற்புதங்களைச் செய்தார்.

ஜீலை 1 முதல் 7ம் தேதி வரை ''இயற்கைக்கு அப்பாற்பட்ட திருப்புமுனை'' என்ற விசேஷித்த அற்புத கூடுகை நடைபெற்றது. ரூஹாடிவி மூலமாகவும், நேரிலும் அநேக ஜனங்கள் கலந்து கொண்டு இயற்கைக்கு அப்பாற்பட்ட திருப்புமுனையைப் பெற்றுக் கொண்டனர். விசேஷமாக ஜுலை 7ம்தேதி ஏழு மணிநேர துதி ஆராதனையில் ஆராதனை வீரர்கள் துதிகளை ஏறெடுத்தார்கள். கர்த்தர் ஜனங்களுடைய கட்டுகளை உடைத்து, அற்புதத்தையும், விடுதலையையும் கட்டளையிட்டார். தேவ நாமம் மகிமைக்கென்று பலர் தேவன் செய்த அற்புதங்களைச் சாட்சியாக கூறினார்கள். (பக்கம் 10, 11ஐப் பார்க்கவும்)

## இந்தியாவிற்காக ஜெபியுங்கள்

**கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்; உன் தேசம் வாழ்க்கைப் படும்** (ஏசாயா 62:4)

நாடு முழுவதும் **77வது சுதந்திர தினத்தைக்** கொண்டாடுகின்ற இந்த மாதத்தில் நம்முடைய தாய் நாட்டின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வேண்டியது நம்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. ''சுதந்திர இந்தியா'' என சொல்லிக்கொண்டாலும் பாவத்திலும், பலவித அருவருப்பான காரியத்திலும் அடிமைப்பட்டுக் கொண்டிருக்கிறது. செய்தித்தாள்களிலும் பத்திரிக்கைகளிலும் ஒவ்வொரு நாளும் நெஞ்சை பதற வைக்கும் காரியங்களைத் தொடர்ந்து கேள்விப்பட்டுக் கொண்டிருக்கிறோம். கிறிஸ்தவர்களுக்கு எதிராக வன்முறை, கலவரங்கள் இன்னும் அரங்கேறிக்கொண்டுதான் இருக்கின்றன. இந்தியாவின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. இந்தியாவின் வளர்ச்சியைத் தடுக்கிற அந்தகாரத்தின் கிரியைகள் நிர்மூலமாகிட வாரம் ஒருமுறையாவது உபவாசித்து ஜெபியுங்கள். விசேஷமாக வரப்போகிற பாராளுமன்ற தேர்தலில் கர்த்தருடைய ஆளுகை செயல்படவும், தமக்கு சித்தமானவர்களைக் கர்த்தர் ஆட்சியில் அமரச் செய்யவும் ஜெபியுங்கள். கர்த்தர் நமது இந்தியாவை ஆசீர்வதித்து, தமது ஷேமத்தால் நிரப்புவார்.

## இது எழுப்புதலுக்காய் எழும்பவேண்டிய காலம்

அன்பானவர்களே, கர்த்தர் நம்முடைய ஊழியத்திற்கு தேவன் தந்த பிரதான தரிசனமான 24 மணிநேரதுதி ஜெப மையம், இந்தியாவின் எழுப்புதலுக்காக தேவனை நோக்கி மன்றாடிட, நம்முடைய இந்திய தேசம் முழுவதும் துதி ஜெப மையங்களை ஏற்படுத்த அநேக முயற்சிகளை செய்துக்கொண்டிருக்கிறோம். தேவனுடைய பெரிதான கிருபையினால் அப்போஸ்தலனாகிய தோமா இரத்தம் சிந்தி மரித்த சென்னைப் பட்டணத்தின் மையப்பகுதியான புனித தோமையார் மலைப்பகுதியில் 24 மணி நேர துதி ஜெப மையத்தை ஏற்படுத்தும்படி மிகுந்த ஜெபத்தோடு பிரயாசப்பட்டு வருகிறோம். ''**விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் கட்டியெழுப்புவேன்**'' என்று சொன்ன வேத வார்த்தையின் படி, துதி மற்றும் ஜெபத்தினால் நாம் வாசல்களை சுதந்தரிக்கப்போகிறோம். இந்த எழுப்புதலின் காரியத்தில் உங்களுடைய பங்கும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். ஆகவே இதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையில் அற்புதத்திற்காக காத்திருக்கிறீர்களா? விசுவாசத்தில் பொருத்தனையோடு ரூஹா ஜெப மையத்திற்காக நீங்கள் விதைக்கும்படி உங்களை உற்சாகப் படுத்துகிறேன். (மேலும் விபரங்கட்கு பக்கம் 19ஐப் பார்க்கவும்)

## புதிய "நன்றி" பாடல்கள்

கடந்த பிப்ரவரி மாதம் "எழும்பி வா" என்ற பாடலை வெளியிட தேவன் கிருபை செய்தார். ஒரு வாலிப தம்பி, என்னிடம் வந்து, "**அண்ணே! வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்வியினால் நான் தற்கொலை செய்து கொள்ளலாம் என்ற நிலையிலிருந்தபோது, இப்பாடலைக் கேட்க நேர்ந்தது. என்னுடைய தற்கொலை எண்ணத்தை மாற்றினேன். வாழ்கின்ற இந்த ஒரு வாழ்க்கையை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தேன்**" என்று சொன்னான். ஆம், இப்பாடல், சோர்ந்து போய் என்ன செய்வதென்று தெரியாமல் முடங்கின நிலைமையில் இருந்த அநேகரை குறிப்பாக வாலிப தம்பி, தங்கைகளை உயிர்ப்பிக்கிறது. மேலும் தேவனுடைய சமூகத்தில் அமர்ந்து ஜெபித்துக்கொண்டிருக்கும்போது அநேக புதிய பாடல்களைத் தேவன் கொடுத்திருக்கிறார். வருகிற நாட்களில் அதை ஒலி, ஒளிப்பதிவு செய்து வெளியிட தேவன் கிருபைகளைத் தரும்படி ஜெபித்துக்கொள்ளுங்கள்.

## ரூஹா டிவி இரண்டாம் ஆண்டு நிறைவு

கர்த்தருடைய மகா பெரும் தயவினால் நமது ரூஹா டிவி ஆரம்பித்து இரண்டாம் வருட நிறைவைக்காண கர்த்தர் கிருபை செய்தார். கடந்த 15 ஆண்டுகளாய் நமது ரூஹா டிவி ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று மிகுந்த பிரயாசத்தோடு மன்றாடி ஜெபித்ததின் விளைவாக கடந்த 2021ம் ஆண்டு ரூஹா டிவியை துவங்க கிருபையாய் வழியைத் திறந்தார். ரூஹா டிவி மூலமாக தேவ வார்த்தைகளாலும் துதி ஆராதனை பாடல்களாலும், தேவ ஊழியர்களின் பிரசங்கத்தினாலும் ஆவிக்குரிய வாழ்க்கையில் மறுரூபம் அடைந்து ஆசீர்வதிக்கப்பட்டோர் இலட்சகணக்கானோர். இந்த ரூஹா தொலைக்காட்சி ஊழியத்தை விலையேறப்பெற்ற ஜெபத்தினாலும் உதாரத்துவமான காணிக்கைகளினாலும் தாங்கின உங்களுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களது பங்களிப்பே இந்த ஊழியத்தை சிறப்பாக செய்வதற்கு உதவியாயிருக்கிறது. தொடர்ந்து நம்முடைய ரூஹா தொலைக்காட்சி அநேக இலட்சம் மக்களுக்கு ஆசீர்வாதமாகவும், சுவிசேஷத்தை அறிவிக்கும் ஆயுதமாகவும் திகழ ஜெபித்துக்கொள்ளுங்கள். **நீங்கள் சென்று சுவிசேஷம் அறிவிக்க முடியாத இடங்களில் ரூஹா டிவி சுவிஷேத்தை அறிவித்து வருகிறதினால் சுவிசேஷப் பங்காளர்களாய் இணைந்து ஊழியத்தை தாங்குவதின் நிமித்தம் நீங்களும் சுவிசேஷம் அறிவிக்கிறீர்கள். இதன் மூலமாக இரட்சிக்கப்படுகிற ஆத்துமாக்கள் உங்கள் கணக்கில் சேர்க்கப்படும் என்பதில் சந்தேகமே இல்லை.**

தினமும் அடியேனுக்காகவும், ரூஹா ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

உங்கள் சகோதரன்

**போதகர். ஆல்வின் தாமஸ்**




## பத்திரிக்கை வாசகர்களின் கவனத்திற்கு...

- முகவரி மாற்றம் இருந்தால், அல்லது நீங்கள் முகவரி மாறிச் சென்ற பிறகும் பழைய முகவரிக்கே பத்திரிக்கை வந்து கொண்டு இருந்தால் உடனே தெரிவியுங்கள்.
- உங்கள் முகவரிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிக்கை வந்தால், நிறுத்த வேண்டிய பத்திரிக்கையைக் குறித்த விபரத்தை உடனே தெரிவியுங்கள்.
- ஒவ்வொரு மாதமும் உங்களுக்குப் பத்திரிக்கை கிடைக்கவில்லை என்றாலோ அல்லது பத்திரிக்கை கிடைப்பத்தில் கால தாமதம் ஏற்பட்டாலோ உடனே தெரியப்படுத்துங்கள்.
- **இந்த ஆண்டிற்கான பத்திரிக்கை சந்தாவினை செலுத்தாதவர்கள் ரூபாய் 200/-ஐ செலுத்தும்படி அன்பாய் கேட்டுக்கொள்கிறோம்.**
- **பத்திரிக்கையை வாசித்து தூக்கி எறிந்து விடாமல் உங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.**
- பத்திரிக்கை சம்பந்தமாக **9884901777** என்கிற இந்த எண்ணிலோ *partnerservice@ruah.in* அல்லது என்கிற இந்த மின்னஞ்சலிலோ தொடர்பு கொள்ளலாம். பத்திரிக்கை வீணாகமல் இருக்க எங்களுக்கு உதவி செய்யுங்கள்.

# புதுப்பெலன் அடைவாய்



- போதகர் ஆல்வின் தாமஸ்

பிரியமானவர்களே, இந்த புதிய மாதத்தில் தேவன் உங்களைப் புதுப்பெலனால் நிரப்பி ஆசீர்வதிக்கப்போகிறார். பலக்காரியங்களைக் குறித்து சோர்ந்துபோயிருக்கிற உங்களை இந்த தீர்க்கதரிசன வார்த்தை உயிர்ப்பிக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. மிகுந்த கவனத்துடன் வாசித்து, கர்த்தருடைய வார்த்தையை அறிக்கை செய்து புதுப்பெலனைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்** (ஏசாயா 40:31)

ஒவ்வொருவருக்கும் இயற்கையாகவே சரீரத்தில் தங்களுடைய வளர்ச்சிக்கு தகுந்த பெலன் இருக்கும். ஆனால் வேதம் சொல்லுகிற இந்த ''புதுப்பெலன்'' என்பது தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குத் தருகிற உன்னத பெலனாகும். இந்த புதுப்பெலனைப் பெற்றுக் கொண்டவர்கள் வயது முதிர்ந்தவர்களானாலும் வாலிபர்களைப்போல மிகத்துடிப்புடன் திடமாக இருப்பார்கள். தங்களுக்கு விரோதமாக வரும் காரியங்களைக் கண்டு பயப்படாமல், எல்லாவற்றையும் எதிர்கொள்ளும் திராணியைக் கொண்டவர்கள். முடியாது என்று மற்றவர்கள் கூறினாலும் ''முடியும்'' என்று சாதித்துக்காட்டுபவர்கள். இப்படிப்பட்ட புதுப்பெலனை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

ஆனால் சிலர் புதுப்பெலனைப் பெற்றுக்கொள்ள விரும்புகிற தில்லை, அதற்கான முயற்சியையும் எடுக்கிறதில்லை. சிலருக்கு புதுப்பெலனை பெற்றுக்கொள்வதற்கான வழித் தெரியவில்லை. சிலர் புதுப்பெலனைப் பெற்றுக்கொள்வதற்கான வழிகள் அவர் களுக்கு கடினமாயிருக்கிறபடியினால் அதை அடையாமற் போகிறார் கள். ஆனால் தேவன் உங்களுக்கு புதுப்பெலனை பெற்றுக்கொள் வதற்கான கிருபைகளைத் தந்து உங்களைக் கழுகைப்போல எழும்ப செய்யப்போகிறார்.

## காத்திருக்கிறவர்களுக்கு புதுப்பெலன்

''காத்திருப்பது'' சில சமயங்களில் தேவன் நம்மை மறந்துவிட்டது போல் தோன்றும். காத்திருப்பு காலம் கசப்பான அனுபவமாயிருக்கும். ஏன் இன்னும் தேவன் அற்புதத்தை செய்யவில்லை என்று அவரிடம் கேள்விகளை எழும்பும். கர்த்தர் எனக்கு அற்புதம் செய்வார் என்று இன்னும் விசுவாசத்தில் உறுதியாய் நிற்கவேண்டுமோ? என்ற சந்தேகங்களும் குழப்பங்களும் நம் மனதில் உலாவிக்கொண்டிருக்கும்.

வயது சென்ற கழுகிற்கு தன்னுடைய அலகுகள் கூர்மையாக இல்லாமல் மழுங்கி வளைந்து போய் காணப்படும். தன்னுடைய உடம்பில் கொழுப்புகள் அதிகமானதால் உடல் பருமன் அதிகரித்து அதிக நேரம் பறக்க முடியாமல் கஷ்டப்படும். மேலும் தன் விரல்களால் மிருகங்களை வேட்டையாட முடியாமல் தன்னு டைய பலத்தை இழந்திருக்கும். இந்த சூழ்நிலையில் அது உயரமான மலை உச்சிற்கு சென்று, தன் அலகுகளை தானே கற்பாறைகளில் உடைத்து விடும். தன் இறக்கைகளை அலகினால் பிடுங்கி எறியும். நகங்களை கல்லுகளில் கீறி உடைத்து, வெறும் கழுகாக இருக்கும். வெயிலினால் உடம்பில் உள்ள கொழுப்புகள் கரையும். கழுகின் அலகுகள், நகங்கள், இறக்கைகள் மறுபடியு மாக வளர்ந்து, இளமையான கழுகைப்போல தன்னை உருமாற்றிக் கொள்ளும் வரை சில மாதங்கள் தன்னை வருத்திக் காத்துக் கொண்டிருக்கும். கழுகின் காத்திருக்கும் காலம் முடிந்த பிறகு புதுப்பெலனைப் பெற்று, தன்னுடைய நீண்ட சிறகுகளை விரித்துக் கொண்டு செட்டைகளை அடித்து மேகத்திற்கு மேலாக எழும்பி, புயல்களை எதிர்த்து பறந்து வரும்.

''**காத்திருப்பு காலம் என்பது வீணான காலம் அல்ல. அது நீங்கள் புதுப்பெலனைப் பெற்றுக்கொள்ளவும், தேவன் உங்களைக் கொண்டு நிறைவேற்றப்போகிற நோக்கத்திற்காகவும் உங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிற பொன்னான காலம்.**'' கழுகு சில மாதங்கள் தன் உடலை வருத்திக்கொண்டு காத்திருந்ததால்தான் பல கிலோமீட்டர் வேகத்தில் வருகிற புயல்களை எதிர்க்கொள்ளும் வலிமையை பெற்றுக்கொள்கிறது. அதுப்போல விசுவாசத்தை தளர விடாமல் தேவனுடைய வேளைக்காக, அவருடைய அற்புதத்திற்காக காத்துக்கொண்டிருக்கிற உங்களுக்கு தேவன் புதுப்பெலனையும் புது அபிஷேகத்தையும் தருவார்.

அதுமட்டுமல்லாது, தேவனுக்காக காத்திருக்கிறவர்களுக்கு ஒரு பெரிய ஆச்சரியம் இருக்கிறது. அதென்னவென்றால், ''**தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல் லாமல் உலகத்தோற்றமுதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை**'' (ஏசாயா.64:4)

ஆம், தேவன் உங்களுக்கு செய்யப்போகும் மிகப்பெரிய அதிசய மான காரியங்களை இந்த உலகத்தில் யாரும் கேட்டது மில்லை, கண்டதுமில்லை. காரணம் அவ்வளவு பெரியதான இயற்

கைக்கு அப்பாற்பட்ட காரியங்களை தேவன் உங்கள் வாழ்க்கையில் செய்யப்போகிறார்.

யோசேப்பு என்ற வாலிபன் தேவன் தன்னை உயர்த்தும் விதத்தைக் குறித்து சொப்பனம் கண்டான். ஆனால் அந்த சொப்பனம் உடனே நிறைவேறவில்லை. அவன் கண்ட சொப்பனத்திற்கும் அவன் வாழ்க்கையில் நடக்கிற காரியங்களுக்கும் சம்பந்தமே இல்லாமல் இருந்தது. எகிப்து தேசத்தில் அடிமையாய் விற்கப்பட்டான்; அடிமையாய் இருந்த இடத்தில் அவன் செய்யாத குற்றத்திற்காக அவன்மேல் பழி சுமத்தப்பட்டு சிறைச்சாலையில் போட்டார்கள். 17 வருடங்கள் அடிமையாய் இருந்த யோசேப்பு, தேவன் தன்னை உயர்த்தும் தருணத்திற்காக காத்திருந்தான். குறுக்கு வழியில் பாவத்தில் ஈடுபட்டு அவன் பெரியவனாருக்க முடியும். ஆனால், கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் கர்த்தருடைய வசனம் அவனைப் புடமிட்டது (சங்கீதம் 105:19) என்று வேதம் சொல்கிறது. யோசேப்போடு சிறைச்சாலையில் இருந்தாலும் அவனோடு கர்த்தர் இருந்தார்.



ஒரு நாள் பார்வோனின் அரண்மனையிலிருந்து சிறையிலிருந்த யோசேப்புக்கு அழைப்பு வந்தது. கர்த்தர் அன்றைய தினம் யோசேப்பின் தலையை உயர்த்தி, சமஸ்த எகிப்துக்கும் அதிகாரியாக மாற்றினார். யோசேப்புக்கு முத்திரை மோதிரங்கள், பொற்சரப்பணி அணிவிக்கப்பட்டது. யோசேப்பே கற்பனை செய்து கூட பார்க்கமுடியாத அளவிற்கு தேவன் அவனை உயர்த்தினார்.

ஆம்! எனக்கு பிரியமானவர்களே, தேவன் உங்களுக்கு கொடுத்த தரிசனம் மிக விலையேறப்பெற்றது. அதை சீக்கிரத்தில் அடைந்து விட முயற்சிக்காமல் கர்த்தருடைய வேளைக்காக காத்திருங்கள். குறித்த காலத்தில் நிறைவேற்றுவார். தாமதித்தாலும் அதற்காக காத்திரு என்று வேதம் சொல்கிறபடியால், காத்திருங்கள் புதுப்பெலனைப் பெற்றுக்கொள்வீர்கள்.

## ஆவியில் புதுப்பெலன்

ஒரு முறை நான் தென் தமிழகத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட பட்டணத்திற்கு மூன்று நாட்கள் விடுதலைப் பெருவிழாவில் பிரசங்கிக்கும்படி அழைக்கப்பட்டிருந்தேன். அப்பொழுது நான் அங்கே சென்று, கூட்டத்திற்காக செய்திகளை ஆயத்தம் செய்து ஜெபித்துக்கொண்டிருந்தபோது, தேவ ஆவியானவர், ஏதோ ஒரு காரியத்தைக்குறித்து ஆவியில் கலங்கிக் கொண்டிருந்த மக்களை எனக்கு காண்பித்தார். அப்பொழுது நான் முழங்காற்படியிட்டு, அந்த மக்களுக்காக ஜெபிக்க ஆரம்பித்தேன். பரிசுத்த ஆவியானவர் என்னை விண்ணப்பத்தின் ஆவியினாலும் மன்றாட்டத்தின் ஆவியானலும் நிரப்பி, இன்றைக்கு நான் அவர்களுக்கு ஆவியில் புதுப்பெலனைத் தருகிறேன் என்று வார்த்தையைக் கொடுத்து அனுப்பினார். மேடையில் ஏறி, பிரசங்கம் செய்யும்போது, பரிசுத்த ஆவியானவர் அலையலையாய் ஒவ்வொருவரையும் தம்முடைய அபிஷேகத்தாலும் வல்லமையாலும் நிரப்பினார். அசுத்த ஆவிகள் அலறிக்கொண்டு வெளியேறின. மூன்று நாட்கள் கூட்டத்தின் முடிவில் ஒவ்வொருவரும் ஆவியில் புதுப்பெலனைப் பெற்றுக்கொண்டனர்.

**மனுஷனுடைய ஆவி அவன் பலவீனத்தைத் தாங்கும். முறிந்த ஆவியை யாரால் தாங்கக்கூடும்?** (நீதிமொழிகள் 18:14) **மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத் தரும், மனோதுக்கத்தினால் ஆவி முறிந்துபோம்** (நீதிமொழிகள் 15:13)

உங்கள் வாழ்க்கையில் நடந்த சில காரியங்களைக் குறித்து கலங்கி தூக்கம் வராமல் மிகவும் பட படத்தது போல இருக்கிறீர்களா? எதிர்காலத்தைக் குறித்த கவலையோடு இருக்கிறீர்களா? வேலையில் கவனம் செலுத்த முடியாமல் முடக்கப்பட்டு கிடக்கிறீர்களா? கவலைப்படாதீர்கள். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். தேவன் உங்கள் ஒடுங்கின ஆவிக்கு பதிலாக துதியின் உடையைக் கொடுக்கிறார். (ஏசாயா 61:1) ஆவியில் சோர்ந்து போயிருக்கிற உங்களுக்கு கர்த்தர் புதுப்பெலன் தருகிறார். உற்சாகத்தின் ஆவியைத் தந்து உங்களை மறுபடியும் உயிர்ப்பிக்கப்போகிறார்.

கெத்சமனே தோட்டத்தில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தாம் சிலுவையில் மரிக்கப்போவதைக்குறித்தும், பாடுகளை அனுபவிக்கப் போகிறதைக்குறித்தும் யோசிக்கும்போது அவர் ஆவியில் கலங்கினார். (யோவான் 13:21) ஆனால் வானத்திலிருந்து தேவதூதன் தோன்றி அவரைப் பலப்படுத்தினான். ஆவியில் கலங்கி துயரப்பட்டுக்கொண்டிருக்கிற உங்களுக்கு எல்லாவற்றையும் எதிர்க்கொள்ள புதுப்பெலனைத் தருகிறார்.

உங்களைப் வேதனைக்குள்ளாக்குகிற எதிர்மறையான காரியங்களைக் குறித்து கேள்விப்படும்போது, அதைக்குறித்து திகிலடையாமல் **சத்தமாகப் பாடல்களைப் பாடுங்கள்.** தேவன் உங்களுக்கு கொடுத்த **வாக்குத்தத்தை உரத்த சத்தமாக அறிக்கையிடுங்கள்.** விசுவாச வார்த்தைகளை பேசி **தேவன் செய்த நன்மைகளுக்காக நன்றி செலுத்தி ஸ்தோத்திரம் செலுத்துங்கள்.** உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்வேன், என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன் என்று வீர வசனமிடுங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயத்தை நிரப்பி புதுப்பெலன் உங்களை ஆட்கொள்ளும்.

அதுமட்டுமல்லாது, உங்களுடைய உள்ளான மனிதனாகிய ஆவிக்குரிய மனிதனையும் தேவன் புதுப்பெலனால் நிரப்பப்போகிறார். தேவனுக்கும் எனக்கும் இடையேயான விரிசல் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது, என்னால் இப்பொழுது தேவ பிரசன்னத்தை உணர முடிவதேயில்லை, வேதாகமத்தை வாசித்து, ஜெபித்து பல நாட்களாகிறது, என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கை மிகவும் தேய்ந்து விட்டது என்று புலம்பிக்கொண்டிருக்கிறீர்களா? இந்த மாதம் கர்த்தர் உங்களைத் தம்முடைய ஆவியினால் நிரப்பப்போகிறார். ஆலோசனையையும் பெலனையும் அருளுகிற பரிசுத்த ஆவியானவர் உங்கள்மேல் தங்கப்போகிறார். அவர் உங்களுக்குள் இருக்கிறபடியினால் வாக்குக்கடங்காத

பெருமூச்சுகளோடு நீங்கள் ஜெபிக்கபோகிறீர்கள். வேதத்தை மணிக் கணக்காக வாசிக்கவும் தியானிக்கவும் பெலன் தரப்போகிறார். ''மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்'' என்று சொன்னவர், உங்கள்மேல் தம்முடைய ஆவியின் அபிஷேகத்தை அளவில்லாமல் பொழிந்தருளப்போகிறார். கடைசி கால எழுப்புதலுக்கென்று உங்களை ஆயத்தப்படுத்துகிறார். ஆகவே சோர்ந்து போகாமல் பரிசுத்த ஆவியானால் தினமும் நடத்தப்பட உங்களை விட்டுக்கொடுங்கள். நிச்சயமாக நீங்கள் பெலனடைந்து உலகம் முழுவதும் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக விளங்குவீர்கள்.

## ஆத்துமாவில் புதுப்பெலன்

**நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளினீர் என் ஆத்துமாவிலே பெலன்தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்** (சங்கீதம் 138:3)

சரீரத்தில் நோய்கள் தாக்கும்போது உடனடியாக கவனித்து குணமாக்காவிட்டால் சரீரத்தில் மரணம் சம்பவிக்கும். அதுபோல ஆத்துமாவைத் தாக்கும் நோய்களையும் உடனடியாய் கண்டுபிடித்து அவைகளை குணமாக்காவிட்டால் ஆத்துமா செத்துப்போகும். ஆகவேதான் தாவீது, ''என் ஆத்துமாவைக் குணமாக்கும்'' (சங்கீதம் 41:4) என்று ஜெபிக்கிறார்.

ஆத்துமாவைத் தாக்குகிற வியாதிகளை மருத்துவ நிபுணர்களால் கண்டுபிடிக்க இயலாது. மன வருத்தம், மன வியாகுலம், மன மடிவு இவை மூன்றும் ஒவ்வொருவரையும் தாக்கக்கூடிய நோய்களாகும். முக்கியமாக கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற ஊழியக்காரர்களை மிக எளிதாகத் தாக்கிவிடுகிறது. ஆகவே இந்த மூன்று வியாதிகளையும் எதிர்க்க தேவன் உங்களுக்கு ஆத்துமாவில் புதுப்பெலனைத் தருகிறார்.

**வில்வீரர் அவனை மனமடிவாக்கி, அவன்மேல் எய்து அவனைப் பகைத்தார்கள்** (ஆதியாகமம் 49 23) ''மனமடிவு'' (Mental Depression) மிகவும் ஆபத்தானது. இது பிசாசிடமிருந்து வருகிறதாயிருக்கிறது. நமது கண்களுக்கு புலப்படாத அந்தகார ஆவிகளே அந்த வில்வீரர். Mental depression is the chief weapon of Satan என்று ரெவ. போப் பிலிப்ஸ் கூறுகிறார்.

கடந்த கால நிகழ்ச்சிகள் உங்களை மனமடிவுக்குள் தள்ளிற்றோ? எதிர்பாராத நிகழ்வுகள் உங்கள் வாழ்க்கையில் நடந்ததால் மனமடிவு என்னும் சாத்தானின் அம்பு உங்களைத் தாக்கியுள்ளதோ? வியாபாரத்தில் நஷ்டம், கடன்காரர்களின் தொல்லை, உறவுகளில் விரிசல், படிப்பில் தோல்வி என பல காரியங்களால் உங்கள் ஆத்துமா சேதப்பட்டிருக்கிறதோ? மனமடிவு என்னும் பிசாசின் அம்பு யோசேப்பின் மனதை தாக்கியது. ஆனால் யோசேப்பின் மனதுக்குள் அவைகளால் புகுந்துவிட முடியவில்லை. காரணம், **''அவனுடைய வில் உறுதியாய் நின்றது. அவன் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களால் பலத்தன. இதினாலே அவன் மேய்ப்பனும் இஸ்ரவேலின் கன்மலையும் ஆனான்** (ஆதியாகமம் 49:24)

மனமடிவு யோசேப்பைத் தாக்கினபோது அவன் மன உறுதியுடன் இருந்தான். எனவே அவன் சோர்வடைந்து தேவன் தந்த கிருபையை நஷ்டப்படுத்தவில்லை. அவன் ஆத்துமாவிலிருந்த தேவ வசனமும் தேவ ஆவியும் அவனுடைய ஆத்துமாவில் புதுப்பெலனைக் கொடுத்தது.

மனஉறுதி என்ற அனுபவம் ஆவியின் அபிஷேகம் பெற்ற அத்தனை பேருக்கும் உண்டு. பெந்தேகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற பேதுருவும் யோவானும் தங்கள் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் தைரியமாய் இருந்தார்கள். அவர்களுக்கு எதிராய் இருந்த அரசாங்கத்தையும் சட்டத்தையும் பார்த்து அவர்கள் பயப்படவில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றி பேசினால் பிரசங்கித்தால் சிறைச்சாலையில் தள்ளப்படுவார்கள். அதன்பின்பு சிரச்சேதம் பண்ணப்படுவார்கள். இப்படிப்பட்ட கொடிய சட்டத்தைக் கண்டு அவர்கள் பயப்படவும் இல்லை. தங்கள் வீட்டைப் பூட்டிக்கொண்டு பதுங்கிக் கொள்ளவுமில்லை. தெருக்களிலும் சந்திகளிலும் தைரியமாய் கர்த்தருக்கு சாட்சி சொன்னார்கள்.

**பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதமையுள்ளவர்களென்றுமு அறிந்திருந்தபடியால் ஆச்சரியப்பட்டு அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்று அறிந்து கொண்டார்கள்** (அப்போஸ்தலர் 4:13)

அன்பானவர்களே, உங்களுக்கு நேரிடுகிற எதிர்ப்புகள், பிரச்சனைகளைக் கண்டு கலங்கிவிடாதிருங்கள். மனமடிவுக்கும் சோர்வுக்கும் இடங்கொடாதிருங்கள். அதற்கு பதிலாக மன தைரியமாய் இருங்கள். **வசனத்தினாலும் ஆவியினாலும் உங்கள் ஆத்துமா புதுப்பெலன் அடையட்டும்.** அப்பொழுது உங்கள் மனம் உறுதியாயிருக்கும். சத்துருவாகிய பிசாசு செய்கிற தந்திரம் என்னவென்றால், உங்களுக்கு விரோதமாய் தீங்கு செய்தவர்களை மன்னிக்க விடமாட்டான். உங்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களை இழப்புகளை மறக்கவிடமாட்டான். எதிர்ப்புகளைக் கண்டு சோர்ந்துபோ என்று சொல்லுவான். ஆனால் இயேசு உங்களுக்கு ஆத்துமாவில் புதுப்பெலனைத் தந்து உங்களைத் தைரியமாய் நிலைநிறுத்துவார். **சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்** (ஏசாயா 40:29)

## சரீரத்தில் புதுப்பெலன்

**இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்லிருந்து புறப்பட்டுவரும் போது, காண்டாமிருகத்திற்கு ஒத்த பெலனால் அவர்களை நிரப்பினார். அதனால் அவர்களுடைய கோத்திரங்களில் பலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை** (சங்கீதம் 105:37)

உடம்பில் உள்ள சாதாரண பெலனைவிட, தேவன் தரும் புதுப்பெலன் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களை செய்யும். ஆம், ஆபிரகாமுக்கு சரீரம் செத்துபோயிற்று, சாராளுக்கு ஸ்திரீகளுக்குரிய வழிபாடு நின்று போயிற்று. ஆனாலும் அவர்களைத் தேவன் தம்முடைய உன்னத புதுப்பெலத்தினால் நிரப்பினதினால் நூறு வயதில் ஈசாக்கை பெற்றெடுத்தார்கள்.

அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலண்டையில் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியான ஒரு மனுஷனைச் சுமந்து கொண்டு வந்து, தேவாலயத்திற்கு உள்ளே போகிறவர்களிடத்தல் பிச்சைக்கேட்கும்படி அவனை தினமும் கொண்டுவந்து வைப்பார்

கள். அந்த வழியாய் யோவானும் பேதுருவும் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களிடத்திலும் அவன் பிச்சைக்கேட்டான். அப்பொழுது அந்த இரண்டுபேரும் அவனை உற்றுப்பார்த்து, வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலிலை. என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன் என்று சொல்லி, ''நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட'' என்று சொல்லி, வலது கையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான். உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. அவன் குதித்தெழுந்துநின்று நடந்து, தேவனைத் துதித்து தேவாலயத்திற்குள் போனான். அவனுடைய இரண்டு கால்களிலும் பெலன் இல்லை. பிறந்தது முதல் தானாய் ஒரு வேலையையும் செய்யாத முடவன். ஆனால் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எழுந்து நட என்று சொன்னபோது, அந்த நாமத்திலிருந்த அற்புத வல்லமை அவனை எழுந்து நிற்கும்படி புதுப்பெலனால் நிரப்பியது. அவன் புதுப்பெலனைப் பெற்றுக்கொண்டு குதித்தான், நடந்தான், நின்றான்.

இதேப்போல அப்போஸ்தலனாகிய பவுல் லீஸ்திரா என்ற பட்டணத்தில் தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் சப்பாணியாயிருந்து, ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்திருந்த ஒரு முடவனை, ''நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்துநில்'' என்று சொன்னபோது அவன் குதித்தெழுந்து நடந்தான்.

2017ம் வருடம் கனடா தேசத்தில் விடுதலைப் பெருவிழாவில் செய்தியளிக்கச் சென்றிருந்தேன். அங்கே தேவனுடைய சுகமளிக்கிற வல்லமையைக்குறித்து பிரசங்கம் செய்தேன். அப்பொழுது சுகத்திற்கான பாடல்களையும் பாடி கர்த்தருடைய நாமத்தை உயர்த்தி, வந்திருந்த ஒவ்வொருவரின் விடுதலைக்காகவும், சுகத்திற்காகவும் ஜெபித்துக்கொண்டிருந்தேன். அந்நேரத்தில் ஒரு 60வயது நிரம்பிய ஒரு முதியவர் தான் பிடித்து நடக்கும் வண்டியோடு என்னை நோக்கி வந்தார். அவரிடம் கர்த்தர் உங்களுக்கு சுகத்தைக் கொடுத்தாரா என்று கேட்டேன். அவர் ஆம், எனக்கு தலையில் ஏற்பட்ட கட்டியினால் தலையில் நான்கு முறை அறுவை சிகிச்சை செய்தார்கள். அதனால் என்னுடைய நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு நடக்க முடியாமல் இந்த தள்ளுவண்டியின் (Walker) உதவியோடு நடந்து கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது ஜெப வேளையில் தேவனுடைய ஆவியானவர் என்னைத் தொட்டு என்னைத் தம்முடைய புதுப்பெலனால் நிரப்பினார். இப்பொழுது நான் இந்த தள்ளுவண்டியின் உதவி இல்லாமல் நடக்கிறேன் என்று சொல்லி, மேடை முழுவதும் அவராகவே நடந்தார். தள்ளுவண்டியின் உதவியில்லையென்றால் கீழே விழுந்துவிடும் நிலையிலிருந்த அவருக்குத் தேவன் புதுப்பெலனைக் கொடுத்து எந்த உதவியும் இல்லாமல் நடக்க கிருபை செய்தார்.



வியாதியோடு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறீர்களா? புண்கள் ஆறாமல் சீழ் வழிந்துக்கொண்டிருக்கிறதா? எழுந்து நடக்க முடியாமல் படுத்தப்படுக்கையில் இருக்கிறீர்களா? நாளுக்கு நாள் உடல் நிலை மிகவும் மோசமாகிக்கொண்டுதான் போகிறது, ஒரு முன்னேற்றமும் இல்லை என்று சொல்லுகிறீர்களா? உங்களுடைய சரீர வியாதியிலிருந்து உங்களை உயிர்ப்பிக்க புதுப்பெலனைத் தருகிறார். **நன்மையினால் உங்கள் வாயைத் திருப்பதியாக்கி, கழுகுக்குச் சமானமாய் உங்கள் வயதை திரும்ப வாலபயது போலாக்குகிறார்.** இயேசுகிறிஸ்துவின் நாமம் உங்களுக்கு புதுப்பெலனைத் தருகிறது. **அவர் தம்முடைய வசனத்தை அனுப்பி உங்களை குணமாக்குகிறார்.** இயேசுகிறிஸ்துவின் தழும்புகளால் நீங்கள் குணமாகி புதுப்பெலனைப் பெற்றுக்கொள்வீர்கள்.

பிறவியிலிருந்து சப்பாணியை எழுந்து நடக்க செய்த தேவன் உங்களையும் நிமிர்ந்து நடக்கச் செய்வார். கர்ப்பப்பையில் நீர்க்கட்டி, பாலிசிஸ்டிக் கருப்பைக் கோளாறு, மலட்டுத்தன்மை போன்ற காரணங்களால் கருத்தரிக்க முடியாமல் இருக்கிறீர்களா? சாராளைப் பிள்ளைதாழ்ச்சியாக்கின தேவன், உங்களுக்கும் பிள்ளைகளைப் பெறுவதற்குரிய புதுப்பெலத்தினால் நிரப்புகிறார். கேன்சர் வியாதியினால் நான் சீக்கிரம் இறந்துவிடுவேனோ என்ற பயத்திலிருக்கிறீர்களா? கேன்சர் வியாதிக்குரிய கிருமிகளைத் தேவன் அளித்து புதுப்பெலனால் உங்களை நிரப்புவார். சோர்ந்து போகாமல் **என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு**, தேவனுடைய கிருபை என்னைத் தாங்குகிறது, என் பலவீனத்தில் அவருடைய பெலன் பூரணமாய் விளங்குகிறது என்று விசுவாச வார்த்தைகளை அறிக்கையிட்டு வியாதிக்கு எதிர்த்து நில்லுங்கள். உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரை தேவனுடைய புதுப்பெலன் உங்கள் சரீரத்தை ஆட்கொள்ளும். கர்த்தர் உங்கள் ஜீவனின் பெலனாயிருந்து, உங்கள் கால்களை மான்கால்களைப்போலாக்கி, உயர்ந்த ஸ்தலங்களில் உங்களை நடக்கப்பண்ணுவார். மேலும் உங்களுக்கு ஐசுவரியத்தை சம்பாதிக்கிறதற்கான பெலத்தைக் கொடுத்து, இப்பொழுது இருக்கிற நிலைமையைப் பார்க்கிலும் உங்களை ஆயிரம் மடங்கு ஆசீர்வதிப்பார்.

**விசுவாசத்தோடு இந்த ஜெபத்தை ஏறெடுங்கள்**

அன்பின் பரலோக பிதாவே! என்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் தருகிற புதுப்பெலனுக்காக நன்றி செலுத்துகிறேன். ஒவ்வொரு நாளும் எனக்கு எதிராக வருகிற சோதனைகளை சாதனைகளாக மாற்றி, ஜெயம் எடுக்க கிருபை தந்தருளும். சோர்வு, மனக்குழப்பம், மனமடிவிலிருந்து நீங்கலாக்கி, உம்முடைய பரிசுத்த ஆவியின் பெலத்தினால் வேலைகளைச் செய்து முன்னேறி செல்ல உதவி செய்தருளும். ''கர்த்தர் அவர்களுடைய பெலன்; அவரே தாம் அபிஷேகம் பண்ணினவனுக்கு அரணான அடைக்கலமானவர்'' சங்கீதம் 28:8) என்று எழுதியிருக்கிறபடி, நீர் என்னுடைய உன்னத பெலனாயிருந்து வழிநடத்தும். உம்முடைய ஆசீர்வாதம் என் வாழ்க்கையில் நிறைவாய் உண்டாயிருப்பதாக! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், ஆமென்!

சாட்சிப் பகுதி

# நன்மை செய்தவரை துதியுங்கள்

வாழ்க்கையில் தீராத வியாதி, கடன் பிரச்சனை, சமாதானமின்மை போன்ற ஏதோ ஒரு காரியத்தினால் வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறீர்களா? இயேசு கிறிஸ்து இன்றும் உங்களுக்கு அற்புதங்களைச் செய்ய வல்லமையுள்ளவராயிருக்கிறார்.

ரூஹா ஊழியங்கள் மூலமாக தேவன் அநேகருக்கு விடுதலையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். கடந்த நாட்களில் ஜெபத்தைக் கேட்டு இயேசு செய்த அற்புதத்தின் சில சாட்சிகள்:



### கருத்தரிக்க கிருபை செய்தார்!

என் கணவர் சாம் ஜெபதுரை. நாங்கள் மதுரையில் வசிக்கிறோம். ரூஹா டிவியில் வரும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் எங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கிறது. எங்களுக்கு திருமணமாகி இரண்டரை வருடத்திற்கும் மேலாக குழந்தை இல்லை. இதனால் நாங்கள் மனமுடைந்து போனோம். சிகிச்சைக்காக மருத்துவரை அணுகியும் பயனில்லை. கர்த்தர் எங்களுக்கு அற்புதம் செய்ய மாட்டாரா? என்று கவலையோடு இருந்த சூழ்நிலையில் ஏப்ரல் 21ம் தேதி ரூஹா டிவி தொலைப்பேசி என்னைத் தொடர்பு கொண்டு ஜெபித்தோம். ஜெபவீரர்கள் "உன் துக்க நாட்கள் முடிந்து விட்டது (ஏசாயா 60:20) என்ற வசனத்தைச் சொல்லி, எங்களுக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தைக்கேட்டு, அடுத்த இரண்டு மாதங்களுக்குள்ளாகவே கருத்தரிக்க கிருபை செய்தார். கர்த்தருடைய நாமத்திற்கு மகிமையைச் செலுத்துகிறேன். *- சகோதரி சாந்தினி, மதுரை*

### ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கச் செய்தார்!

நான் கோவை மாவட்டத்தில் காவல் துறையில் பணியாற்றி வருகிறேன். எனக்கு இரண்டு குழந்தைகள் இறந்து பிறந்தன. இதனால் நானும் என் மனைவியும் மிகுந்த துக்கத்தில் இருந்தோம். என்னுடைய மனைவியின் சரீரமும் மிகவும் பாதிக்கப்பட்டது. இந்த சூழ்நிலையில் என்னுடைய பணி செய்கிற காவலர் ஒருவர் போதகர் ஆல்வின் தாமஸ் அவர்கள் பேசுகிறன்ற ரேமா வார்த்தையை அவரது வாட்சப் ஸ்டேட்டஸில் பார்க்க நேரிட்டது. அதில், "நீங்கள் வேரூன்றி கனி கொடுப்பீர்கள்" என்ற வசனத்தைக்கூறி, கர்த்தர் உங்களைக் கனிக் கொடுக்கிறவர்களாய் மாற்றுவார் என்று தேற்றும் வார்த்தைச் சொல்லி, தைரியப்படுத்தினார்கள். அதுமுதல் தினமும் ரேமா வார்த்தையைப் பார்த்து மற்றவர்களுக்கும் அனுப்பி, ஒவ்வொரு நாளும் வார்த்தையை அறிக்கையிட்டு ஜெபித்தேன். கர்த்தர் எங்களை ஆசீர்வதித்து, கடந்த மாதம் ஆண் குழந்தையைப் பெற்றெடுக்க கிருபை செய்தார்.
*- சகோ. ரமேஷ், கோவை*



### தோல்வியாதி முற்றிலுமாக சுகமானது!

அநேக நாட்களாக எனது உடலில் சொரியாசிஸ் போன்ற தோல் வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டேன். காரமான உணவுகளை உட்கொண்டாலும், அசைவ உணவுகளை உட்கொண்டாலும் தாங்க முடியாத அரிப்பு என் தோலில் ஏற்படும். மருத்துவரை அணுகி பல மருந்துகளை வாங்கி, தேய்த்தாலும் குணமாகாமல் இருந்தது. இந்த சூழ்நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் ரூஹா டிவி மூலமாக நடைபெற்ற "சிலுவையின் மூலமாய் வரும் அற்புதம்" என்ற கூட்டத்தில் வழியாக பங்கேற்றேன். அப்பொழுது போதகர், "பல ஆயின்மெண்ட் போட்டாலும் சுகமாகாத தோல்வியாதியை இன்று சுகப்படுத்துகிறார்" என்று சொல்லி ஜெபித்தார்கள். நானும் அவர்களோடு இணைந்து கர்த்தாவே எனக்கு சுகத்தைத் தாரும் என்று ஜெபித்தபோது, கர்த்தர் தோல் வியாதியிலிருந்து எனக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்து, தோலில் உள்ள தழும்புகள் மாறவும் கிருபை செய்தார்.
*- சகோதரி எஸ்தர் ராஜா, சென்னை*

TESTIMONY



## தலையை நிமிரச் செய்தார்!

நான் கொரோனா லாக்டவுன் சமயத்தில் என்னுடைய மாமா ஒருவர் எனக்கு ரூஹா திருச்சபையின் ஆராதனை யூடியூப் லிங்க்ஐ அனுப்பிவிட்டார்கள். அப்போதிலிருந்து நான் ரூஹா டிவியில் நடைபெறும் ஒவ்வொரு விசேஷித்த ஜெபங்களையும், கூட்டங்களையும் நேரலையில் பார்ப்பேன். போதகர் கொடுக்கும் ஒவ்வொரு தேவ வார்த்தைகளும் என்னை பலப்படுத்தின. விசுவாச வாழ்க்கையில் வளர உதவின. கல்லூரியில் 4வது செமஸ்டரில் ஒரு பாடத்தில் தோல்வியடைந்தாலும், இதை அடுத்த செமஸ்டரில் எழுதி தேர்ச்சி பெற்றேன். கல்லூரி படிப்பை முடித்து, நல்ல பள்ளியில் ஆசிரியர் வேலை கிடைத்தது. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் பைத்தியமான என்னைத் தெரிந்து கொண்டார்.

*– சகோதரி அக்ஷரா, திருநெல்வேலி*



## தீர்க்கதரிசனத்தை உறுதிபடுத்தி அற்புதம் செய்தார்!

கர்த்தருடைய பெரிதான கிருபையால் எனக்கு மாலத்தீவில் செவிலியர் வேலை கிடைத்தது. ஆனாலும் அங்கு செல்வதற்கான தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருந்தேன். மனதில் ஏதோ ஒரு பயம் இருந்து கொண்டே இருந்தது. தேர்வுக்கு முன்தினம் போதகர் துடியலூர் விடுதலைப்பெருவிழாவில் பேசின நேரலை செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அதில் போதகர், “இன்னும் மூன்று நாட்களுக் குள்ளாக உங்களுக்கு ஒரு நற்செய்தி மின்னஞ்சலில் வந்திருக்கும். கர்த்தர் உங்களுக்கு அதைச் செய்வார்” என்று சொன்னார்கள். அதை நான் விசுவாசித்து, மறுநாள் தேர்வு எழுதினேன். நீங்கள் தேர்வில் பெற்றீர்கள் என்று போதகர் சொன்னதுபோலவே மூன்றாம் நாள் எனக்கு மின்னஞ்சல் வந்தது. எனக்கும் என் குடும்பத்தினருக்கும் அளவில்லாத சந்தோஷம். அற்புதத்தை செய்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

*– சகோதரி மோனிகா, நாகர்கோவில்*



## “எழும்பி வா” பாடல் என்னை உயிர்ப்பித்தது!

நான் கடந்த 2022ம் ஆண்டு ஜூலை மாதம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டேன். கடந்த பிப்ரவரி மாதம் 19ம்தேதி இரவு இந்த பாடலை யூடியூப்பில் பார்த்தேன். இன்றைய இரவு மட்டும் இந்த 5 நிமிடப் பாடலை கிட்டத்தட்ட 3 மணி நேரத்திற்கும் மேலாகக் கேட்டேன். இந்தப்பாடல் சோர்ந்து போயிருந்த என்னை உற்சாகப்படுத்தி, இன்னும் அதிகமாக கிறிஸ்துவுக்காய் எழும்ப வேண்டும் என்று வைராக்கியத்தைக் கொடுத்தது. அதுமாத்திரமல்ல.. தூத்துக்குடி பேரின்ப பெருவிழாவில் போதகர் என்னை மேடைக்கு அழைத்து, எனக்காக ஜெபித்து, தீர்க்கதரிசன வார்த்தைகளை உரைத்தார்கள். கோடிக்கணக்கான ஜனங்கள் இருக்கும் இந்த உலகில் தேவன் என்னையும் தெரிந்து கொண்ட கிருபைக்காய் அவரைத் துதிக்கிறேன். *–சகோ. டிக்சன், தூத்துக்குடி*



## இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் தேவைகளைச் சந்தித்தார்!

நாங்கள் கோவை மாவட்டத்தில் வசிக்கிறோம். நாங்கள் ஒவ்வொரு நாளும் ரூஹா டிவியின் நிகழ்ச்சிகளைப் பார்த்து வருகிறோம். இதில் நானும் என் கணவரும் கலந்து கொண்டோம். கடந்த வருடம் என் மகளுக்கு ஸ்கூல் பீஸ் கட்ட முடியாமல் கஷ்டப்பட்டோம். இதனால் மகள் பள்ளிக்கு செல்ல முடியாமல் இருந்தாள். அச்சமயத்தில் ரூஹா டிவியில் இயற்கைக்கு அப்பாற்பட்ட திருப்புமுனையின் ஏழு நாட்கள் என்ற சிறப்பு ஜெப நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கண்ணீரோடு என்னுடைய மகளின் தேவைகள் சந்திக்கப்பட வேண்டும் என்று ஜெப விண்ணப்பத்தை அனுப்பியிருந்தேன். போதகரும் ரூஹா டிவி குழுவினரும் பாரத்தோடு ஜெபித்தார்கள். அந்த ஏழு நாட்கள் முடிந்து எட்டாவது நாளில் கட்டணத்தை செலுத்த வேண்டிய முழு தொகையையும் தேவன் சந்தித்தார். எங்களை வெட்கப்படுத்தாமல் தேவைகளைச் சந்தித்த தேவனுக்கு நன்றி!

**அன்பானவர்களே! இவர்களுக்கு அற்புதம் செய்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, உங்களுக்கும் அற்புதம் செய்வார். உங்கள் ஜெபவிண்ணப்பங்கள் எதுவாயிந்தாலும் கீழே உள்ள தொலைப்பேசி என்னுக்கு போன் மூலமாகவோ, வாட்சப் மூலமாகவோ தெரியப்படுத்துங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம். கர்த்தர் ஜெபத்தைக்கேட்டு அற்புதம் செய்வார். மேலும் நீங்கள் கர்த்தரிடத்திலிருந்து அற்புதங்களைப் பெற்றிருப்பீர்களென்றால் உங்கள் சாட்சியை தேவ நாமத்தின் மகிமைக்கென்று எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.**

**நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி எண்கள் 9884901777, 044 - 61328777**

# SUPERNATURAL திருப்புமுனை
## 7 Hrs Praise & Worship


Ps. Alwin Thomas | Evg. Albert Solomon | Evg. Robert Roy | Ps. Osborn Sam | Ps. Benny Visuvasam | Bro.Fencius




ஜீலை மாதம் 1ம் தேதி முதல் 7ம் தேதி வரை இயற்கைக்கு அப்பாற்பட்ட திருப்புமுனை என்ற அற்புதகூடுகை ஒவ்வொரு நாளும் மாலை 6 மணிக்கு நடைபெற்றது. ரூஹா டிவியில் ஒளிபரப்பட்ட இந்த அற்புத கூடுகையில் ஆயிரக்கணக்கானோர் நேரலையில் இணைந்து கொண்டார்கள். சுமார் 50,000ற்கும் அதிகமான ஜெபவிண்ணப்பங்களை போன் மூலமாகவும் வாட்சப் மூலமாகவும் பகிர்ந்து கொண்டு தங்களுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். விண்ணப்பங்களை அனுப்பின ஒவ்வொருவருக்கும் தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களைச் செய்து கொண்டிருக்கிறார் என்பதில் சந்தேகமே இல்லை.




ஜீலை 7ம் தேதி நடைபெற்ற 7மணி நேர துதி ஆராதனையில் Eva. Albert Solomon, Ps. Robert Roy, Bro. Fenicus, Ps. Benny Visuvasam, Ps. Edwin Ps. Cherie மற்றும் ரூஹா குழுவினர்கள் ஆராதனையிலும் தேவ பிரசன்னத்திலும் ஜனங்களை நடத்தினார்கள். முடிவில் நமது சகோதரர் போ. ஆல்வின் தாமஸ் அவர்கள் துதிஆராதனையோடு சுகமளிக்கும் விடுதலை ஜெபத்தை செய்தபோது அநேகருக்கு தேவன் அந்த நிமிஷமே சுகத்தைக் கொடுத்தார். பின்பு விடுதலையை பிரகடனப்படுத்தும் விதமாக ஏழு எக்காளங்களை ஊதினபோது, பரிசுத்த ஆவியானவர் அநேகரை விடுதலையாக்கினார். அசுத்த ஆவிகள் அலறி வெளியேறின. இக்கூட்டத்திற்கு பெங்களூர், திருச்சி, கோயம்புத்தூர், காஞ்சிபுரம் என பல மாவட்டங்களிலிருந்து வந்து நேரில் கலந்து கொண்டு கர்த்தரை ஆராதித்தனர். இக்கூட்டத்தின் மூலமாக தேவன் செய்த அற்புத சாட்சிகள் சில...



### மூட்டு வலியிலிருந்து சுகத்தைக் கொடுத்தார்

எனக்கு பல ஆண்டுகளாக மூட்டு வலி மற்றும் பாதவலியினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தேன். இதனால் இரவு நேரங்களில் என்னால் சரியாக தூங்க முடியாது, உட்காரவோ எழுந்திரிக்கவோ முடியாமல் இருந்தேன். ரூஹா டிவியில் ஒளிபரப்பு செய்த Supernatural திருப்புமுனை அற்புத கூடுகையில் கலந்து கொண்டு என் ஜெப விண்ணப்பத்தை அனுப்பினேன். கர்த்தர் ஜெபத்தைக்கேட்டு எனக்கு சுகத்தைக்கொடுத்தார். அன்று இரவு நன்றாக தூங்கி எழுந்து நடந்து என் வேலைகளைச் செய்ய கிருபை செய்தார்.

- சகோ. சாமுவேல், சென்னை.






Ps. Edwin



Ps. Cherie Mitchelle

### 4 வருடங்களாக இருந்த தோல்வியாதி சுகமானது

எனக்கு 4 வருடங்களாக தலையில் சொரியாசிஸ் இருந்தது. இதற்காக பல மருந்துகளை எடுத்துக் கொண்டும் குணமாகவில்லை. இதனால் எந்த புளிப்பு சுவையுள்ள உணவை சாப்பிட முடியாமல் இருந்தேன். மிகுந்த வேதனையில் இருந்தேன். இந்த சூழ்நிலையில்தான் Supernatural திருப்புமுனை ஏழு மணி நேர ஜெபத்தில் நேரலையில் கலந்து கொண்டேன். அப்பொழுது போதகர் தோல்வியாதியிலிருந்து சுகத்தைத் தந்து, உங்கள் வாழ்க்கையில் திருப்புமுனை உண்டாக்குகிறார் என்று தீர்க்கதரிசனமாக சொன்னார். நானும் விசுவாசத்தோடு ஜெபித்துக்கொண்டிருந்தேன். கர்த்தர் என்னுடைய கண்ணீரின் ஜெபத்தைக்கேட்டு சுகமாக்கினார். – சகோதரி ராணி.



### தோள்பட்டை வலி மறைந்தது



என்னுடைய மூத்த மகள் சிம்ரிட்டா, 9ம் வகுப்பு படிக்கிறாள். அவளுக்கு வலது தோள்பட்டையில் ஒருவாரத்திற்கு மேலாக அதிகமான வலி இருந்தது. அந்த வலியோடுதான் பள்ளிக்கு சென்று வந்தாள். இந்நிலையில் Supernatural திருப்புமுனை கூட்டத்தின் 7 மணி நேர துதி ஆராதனை ஜெபத்தில் நானும் எனது மகளும் யூடியூபில் பாத்துக்கொண்டிருந்தோம். அப்பொழுது போதகர், "தோள்பட்டை வலியினால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறவர்களுக்கு தேவன் இப்பொழுதே சுகத்தைத் தருகிறார்" என்று தீர்க்கதரிசனமாக ஜெபித்தார். நானும் எனது மகள் மீது கைவைத்து சுகத்திற்காக ஜெபித்துக்கொண்டிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக்கேட்டு அப்பொழுதே சுகத்தையும் பெலனையும் கொடுத்தார். கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். *-சகோ. நித்யா கார்த்திக், குன்னூர்*



### மனக்குழப்பத்திலிருந்து விடுதலைக் கொடுத்தார்



நாங்கள் சில மாதங்களாகத்தான் இந்த ரூஹா டிவியைப் பார்த்து வருகிறோம். Supernatural திருப்புமுனை கூட்டத்தை ஆறு நாட்கள் நேரலையில் பார்த்தோம். 7வது நாள், ஏழு மணி நேர ஜெபத்தில் நேரலையில் கலந்து கொள்வதற்காக நானும் என் குடும்பமும் கோவை மாவட்டத்திலிருந்து பலத் தடைகள் மத்தியில் சென்னைக்கு வந்தோம். பல கேள்விகள் மத்தியில் என் எதிர்காலத்தைக்குறித்த கேள்விகளோடும் குழப்பத்தோடும் இருந்தேன். என்னுடைய எல்லா கேள்விகளும் தேவன் பதிலை போதகர் மூலமாக பேசினார். நான் என்ன செய்ய வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் என்னோடு இடைப்பட்டார். கண்ணீரோடு வந்தேன், ஆனால் மிகுந்த சந்தோஷமாகச் செல்கிறேன்.
– சகோ. ஷெர்லி, கோவை.

### Angio பண்ணாமலேயே Heart Blockஐ சுகமாக்கினார்



என் பெயர் லிண்டா. நான் இந்த Supernatural திருப்புமுனை கூட்டங்களை ஆன்லைனில் பார்த்துக்கொண்டு வந்தேன். கடந்த ஜூலை மாதம் 6ம் தேதி இரவு எனக்கு இருதயத்தில் அடைப்பு ஏற்பட்டிருக்கிறது என்று ரிப்போர்ட் வந்தது. அந்த ரிப்போர்ட்டை எடுத்துக்கொண்டு மறுநாள் காலை நான் மருத்துவமனைக்கு சென்றேன். டாக்டர் என்னை பரிசோதித்து விட்டு உடனே நீங்கள் அட்மிட் ஆக வேண்டும். 55 சதவீதம் உங்களுக்கு அடைப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள். நான் அங்கே சென்றபிறகு முதலில் எனக்கு இசிஜி எடுத்தார்கள். அதிலும் அடைப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். நானும் எனது பிள்ளைகளும் மிகவும் பயந்துவிட்டோம். அப்பொழுதே என்னுடைய ரூஹா திருச்சபையில் உள்ள ஜெபவீரரைத் தொடர்பு கொண்டு ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். ஜெபவீரர்கள் எனக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். "கர்த்தாவே, இந்த சூப்பர்நேச்சுரல் அற்புத கூடுகை நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த நாளில் எனக்கும் ஒரு அற்புதத்தை செய்யுங்கப்பா" என்று நானும் ஜெபித்தேன். மறுபடியும் எனக்கு டெஸ்ட் எடுக்க வேண்டும் என்று என்னை அழைத்துக்கொண்டு போனார்கள். அந்த டெஸ்ட் எடுத்து ரிப்போர்ட் வந்தபோது, அதில் "அடைப்புகள் ஒன்றுமில்லை" என்று வந்தது. கர்த்தர் ஜெபத்தைக்கேட்டு இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புத சுகத்தைக்கொடுத்து என்னை சாட்சியாக நிறுத்தியிருக்கிறார். தேவனுக்கே மகிமை!



# KOVAI THUDIYALUR MIRACLE FESTIVAL

## விடுதலைப் பெருவிழா



Ps. Edwin

கர்த்தருடைய பெரிதான கிருபையால் அகில இந்திய குடும்ப ஜெப ஐக்கியத்தின் மூலமாக கோவை மாவட்டம் துடியலூரில் 25 ஆண்டுகளாக பட்டணத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், எழுப்புதலுக்காகவும் விடுதலைப்பெருவிழா தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தக் கூட்டங்களை பாஸ்டர் எட்வின் அவர்கள் தங்கள் திருச்சபையாருடன் மிகுந்த பிரயாசத்துடனும், பாரத்துடனும் ஒவ்வொரு வருடமும் நடத்தி வருகிறார்கள். இந்த வருடம் 25வது ஆண்டு வெள்ளி விழாவில் ஐந்து நாட்கள் கூட்டம் மிகச்சிறப்பாக நடைபெறவும் ஐந்து நாட்களும் ரூஹா டிவி மூலமாக நேரலையில் கூட்டத்தை ஒளிபரப்பவும் தேவன் உதவி செய்தார். கடைசி இரண்டு நாட்கள் கூட்டத்தில் நமது சகோதரர் துதி ஆராதனை மற்றும் தேவ செய்தி அளித்து ஜனங்களின் விடுதலைக்காக விசேஷ பிரார்த்தனை ஏறெடுத்தார்கள்.




முதல் நாளில் **மறுபடியும் உங்களுக்கு அற்புதத்தைச் செய்வார்** என்று பிரசங் கித்தார். ஜெப வேளையின்போது ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, கர்ப்பத்தின் கனியின் ஆசீர்வாதத்திற்காக காத்திருக்கிறவர்களை மேடைக்கு முன்பாக அழைத்தபோது, சுமார் 50க்கும் மேற்பட்ட கணவன் மனைவி வந்தார்கள். அவர்களுக்காக ஜெபித்து, "அடுத்த வருடத்தில் நீங்கள் குழந்தையை அணைத்துக்கொண்டிருப்பீர்கள்" என்று தீர்க்கதரிசனம் உரைத்தார்.



SYNOD போதகர்கள் குழு

இரண்டாவது நாளில் **யார் என் காரியமாய் போவார்?** என்று ஊழியத்திற்காக அறைகூவல் விடுத்தபோது, அநேக வாலிபர்கள் தங்களை ஊழியம் செய்ய ஒப்புக் கொடுத்தார்கள். அவர்களுக்காக ஜெபித்தபோது, தேவன் தம்முடைய ஆவியின் அபிஷே கத்தை அளவில்லாமல் ஊற்றினார். ஆவியானவரின் அபிஷேகத்தை வாலிபர்கள் பெற்றுக்கொண்டு, கண்ணீர் மல்க, தேவன் தன்னோடு இடைப்பட்ட அனுபவத்தை சாட்சி களாகப் பகிர்ந்து கொண்டார்கள். சகோதரி செர்ரி மிச்சேல் துதி ஆராதனை ஏறெடுத்து தேவ பிரசன்னத்தில் ஜனங்களை நடத்தினார்கள். போதகர் ஜாய் வந்திருந்த ஜனங்களின் ஆசீர்வாதத்திற்காக விசேஷ ஜெபத்தை ஏறெடுத்தார்கள். கூட்டத்தின் இறுதியில் ஏழு எக்காளங்களை ஊதப்பட்டது. போதகர், இரவு 1 மணி வரை ஒவ்வொரு தனிப்பட்ட ஜனங்களுக்காக எண்ணெய் பூசி ஜெபம் ஏறெடுத்தார். இந்த விடுதலைப்பெருவிழா பட்டணத்திற்கு ஆசீர்வாதமாக இருந்தது.


Bro. Jefferson

இக்கூட்டத்தின் 5 நாட்களிலும் அன்பு போதகரின் மகன் பென்னி தாமஸ் அவர்கள் மீடியா முழுவதையும் பொறுப்பெடுத்து, நேரலையில் ஒளிப்பரப்ப மிகச்சிறப் பாக செயல்பட்டார். இரண்டு நாட்களும் மிகுந்த அன்புடன் உபசரித்த **சகோதரர் சாம்** அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம். இந்தகூட்டங்களுக்காக உழைத்த, ஜெபித்த ஒவ்வொருவரையும் கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!














### வசனத்தினால் எங்களைத் தேற்றினார்



நானும் என் மனைவியும் மனம் உடைந்து இந்த கூட்டத்திற்கு வந்தோம். மிகுந்த போராட்டங்கள், கஷ்டங்கள். தேவன் எனக்கு ஒரு அற்புதம் செய்ய மாட்டாரா என்று கண்ணீர்விட்டு பிரார்த்தனை செய்தோம். செய்தி வேளையில் போதகர் மூலமாக எங்களோடு பேசினார். "மறுபடியும் நான் உங்களுக்கு அற்புதம் செய்து, நீங்கள் இழந்த எல்லாவற்றையும் திருப்பிக்கொள்ளும்படி செய்வேன்" என்றார். மனதில் மிகுந்த சந்தோஷம் சமாதானம் உண்டானது. மனநிறைவோடு நாங்கள் வீட்டிற்கு செல்கிறோம்.



### சர்ப்பத்தின் கிரியைகளிலிருந்து விடுதலைத் தந்தார்

நான் சில மாதங்களாக தூங்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டேன். ஒவ்வொரு நாள் இரவும் பாம்பு வருவதைப்போன்று கனவு காண்பேன். இதனால் தூக்கம் கலைந்து எழுந்துவிடுவேன். கூட்டத்தில் போதகர் தீர்க்கதரிசனமாக, உங்களை கட்டி வைத்திருக்கிற சங்கிலிகளை அறுத்து, சர்ப்பத்தின் கிரியைகளிலிருந்து விடுதலைத் தருகிறார் என்று சொல்லி ஜெபித்தபோது, எனக்குளிலிருந்து ஏதோ ஒன்று வெளியேறியதை உணர்ந்தேன். கர்த்தர் இப்பொழுது என்னை பூரணமாக விடுதலையாக்கினார்.

### கழுத்து வலியிலிருந்து சுகம் கொடுத்தார்



எனக்கு கழுத்து அநேக நாட்களாக கழுத்து வலி இருந்தது. அதிக நேரம் உட்கார்ந்து வேலை செய்ய முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டேன். கூட்டத்திற்கு வரும்போதும் எனக்கு வலி இருந்தது. ஆராதனை வேளையில் போதகர் சுகத்திற்காக ஜெபித்தபோது, கர்த்தர் எனக்கு வலியிலிருந்து சுகத்தைக் கொடுத்தார். அதுமாத்திரமல்ல எதிர்காலத்தைக்குறித்த கவலையோடு வந்தேன். இப்பொழுது தேவ சமாதானம் என் இருதயத்தை நிரப்பினது. கர்த்தருக்கு நன்றி.




### வயிற்று வலி மறைந்தது

நான் காலையிலிருந்து மிகுந்த வயிற்று வலியினால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தேன். தாங்க முடியாத வேதனை. இதனால் நான் ஞாயிறு ஆராதனைக்கு கூட செல்ல முடியவில்லை. இந்த சூழ்நிலையில் என்னுடைய நண்பர் ஒருவர் இங்கு கூட்டம் நடைபெறுகிறது. என்னோடு கூட வா என்று சொன்னார்கள். எனக்கு வயிற்றுவலி இருந்தாலும் கூட்டத்திற்கு போவோம் என்று முடிவெடுத்து வந்தேன். ஜெப வேளையில் போதகர், வயிற்றுவலியோடு ஒரு சகோதரி வந்திருக்கிறீர்கள் கர்த்தர் உங்களுக்கு இப்பொழுதே சுகத்தைத் தருகிறார் என்று சொல்லி ஜெபித்தார்கள். அப்பொழுதே கர்த்தர் எனக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார்.

### ரூஹா டிவி ஆசீர்வாதமாக இருக்கிறது!



என்னுடைய பெயர் போதகர். ஜாக் நேசக்குமார். நான் பெரியநாயக்கன் பாளையத்தில் ஊழியம் செய்து வருகிறேன். இரண்டு நாட்கள் கூட்டமும் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. தேவ தாசன் மூலமாக என்னோடு பேசினார். அதுமாத்திரமல்ல, நான் தினமும் ரூஹா டிவியில் ஒளிபரப்பாகின்ற "அதிகாலை உம் திருமுகம் தேடி" நிகழ்ச்சியையும், போதகரின் செய்தியையும் கவனிப்பேன். எனக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கிறது. கர்த்தருக்கே மகிமை!




# உண்மையை சொல்லட்டுமா?



- PAS. CHERIE MITCHELLE

ஹலோ நண்பர்களே!! எல்லாரும் எப்படி இருக்கீங்க? நா ரொம்ப நல்ல இருக்கேன். ஒரு வழியா இந்த வருஷத்தோடா பாதியைக் கடந்துவிட்டோம். எல்லாமே கர்த்தர் கிருபைதான். நீங்க எல்லாரும் இலக்குகளை நல்லபடியா அடைவதற்கு செயல்பட்டுட்டே இருக்கீங்கனு நம்புறேன். நானும் எனக்கான இலக்குகளுக்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். சரி, இந்த மாசம் ஆண்டவரோட ஒரு முக்கியமான குணாதிசயத்தை குறித்து தான் பார்க்க போகிறோம். பொதுவாக, ஒரு மனுஷன், தேவன் எப்படிபட்டவர்? என்று தெரிந்துக் கொள்ள பரிசுத்த வேதாகமத்தை படித்தாலே நன்கு அறிந்துக் கொள்ளலாம். தேவன் அன்புள்ளவர், கிருபையுள்ளவர், சாந்தமுள்ளவர் என்றெல்லாம் நாம வசித்து தெரிந்து கொள்கிறோம். ஆம், அது உண்மைதான். ஒரு மனிதனுக்கும் அதே போன்ற தன்மைகள் இருக்கிறது. ஏன்னா, நாம எல்லாரும் தேவசாயலின்படியேயும் ரூபத்தின்படியேயும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய குணத்தை பற்றி நம்ம வீட்டுல இருக்கவங்க கிட்ட கேட்டோம்னா அவங்க சொல்லுவாங்க, நாமெல்லாம் அன்பானவர்களா இல்ல.. ஆக்ரோஷமானவர்களானு. ஒருவர் யார்? என்பதை அவர்களின் சுபாவமே வகையறுக்கும். அவர்களின் குணாதிசயம் எப்படியோ அப்படி தான் அவர்களை அடையாளம் காணமுடியும். நம் ஆண்டவருக்கும் ஒரு குணாதிசயம் உண்டு அவர் "**உண்மையுள்ளவர்**". உண்மை என்பது அவரது குணம் மட்டுமின்றி அவரே உண்மையுமாயிருக்கிறார். அவரே "**சத்தியம்**" என்று யோவான் 14:6 சொல்லுகிறது.

சரி, வாங்க ஆண்டவர் எதிர்ப்பார்க்கிற உண்மை என்னென்ன? அவர் எந்த அளவிற்கு உண்மையுள்ளவர் என்பதை பார்ப்போம்.

## வார்த்தையில் உண்மை

இன்றைய காலகட்டத்துல முதலில் நாம ஏமாறுகிறது வார்த்தை யில்தான். செயலுக்கு முன்னாடி வார்த்தையே வருகிறதால் அதுதான் நம்மை முழுவதுமாக வஞ்சிக்கிறது. நம்ம ஏவாள் கூட first பழத்தை சாப்பிடும் முன்னாடி வார்த்தையிலதான விழுந்தாங்க. பல வேளைகளில் மனிதர்கள் நம்மிடையே கூறும் வாதைகள் மெய்யென்று நினைக்கிறோம். ஆனால் அவற்றுக்குள் பொய் மறைக்கப்பட்டுள்ளது என்பது தெரியவில்லை. சில நேரத்தில் நாமும் தவறை மறைக்க பொய்கூறுகிறோம். ஆனால், தேவனோ அதை விரும்பவில்லை. தேவன் உண்மையுள்ளவனைதான் நோக்கி பார்க்கிறார். ஆண்டவர் கிட்ட சொல்லுகிற காரியத்திலும் மனிதர்கள் இடையேயும் நான் பேசும்போது எந்த அளவிற்கு உண்மையை உரைக்கிறோம் என்றுதான் அவர் எதிர்பார்க்கிறார். வேதத்திலும் நாம் பார்க்கும்போது, ஆபிரகாம் சாராளை தன் சகோதரி என்று பொய் சொன்னான். அதையே தன் புத்திரனான ஈசாக்கும் உரைத்தான். இவ்விருவரும் அந்நியர்களிடத்தில் பொய்கூறினார்கள். ஆனால் அவர்களின் சந்ததியில் வந்த யாக்கோபோ தன் தகப்பனான ஈசாக்கிடமே பொய்யை கூறினான். பொய் தலைமுறை தலைமுறையாய் கடந்து வருவதை நாம் இங்கே காணலாம். பொய், ஒரு மனித இயல்பாக உள்ளது. சிலர் தாங்கள் தப்பித்துக்கொள்ள பொய்யை கூறி சிறிது காலம் தப்பிக்கிறார்கள். ஆனால் அதுவே அவர்கள் வாழ்வின் இயல்பாகவே மாறிவிடுகிறது.

இயேசுவின் சீஷனான நம்ம பேதுருவும் நான் அவரை அறியேன் என்று 3 முறை உண்மையை மறைத்திருக்கிறார். (யோவான் 18:17, மத்தேயு 26:69, லூக்கா 22:58) தவறுகளை செய்ய பொய்யே வழி வகுக்கிறது. பொய் சொன்னால் தப்பித்து கொள்ளலாம் என்பது தற்காலிக அடைக்கலமாக மாறுகிறது.

ஒருவேளை உண்மை மறைக்கப்பட்டிருக்கலாம் ஆனால் ஒரு நாள் நிச்சயமாய் வெளி வரும். வெளியரங்கமாகாதஇரகசியமுமில்லை, அறியப்பட்டு வெளிக்குவராத மறைபொருளுமில்லை. (லூக்கா 8:17) உண்மையை மறைத்து வாழும் வாழ்வில் நிம்மதியையும் சமாதானத்தையும் காணமுடியாது. அங்கே பயமும், பிரச்னையும், மனபாரமுமே மிஞ்சும். உண்மை தெரிந்துவிடுமோ என்றே அஞ்சி அநேகர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அநேகர் திருமண காரியங்களில் மணமகனை பற்றியோ மகளை பற்றியோ ஏதேனும் பொய்யை சொல்லி திருமணத்தை நடத்தி வைக்கின்றார். ஆனால் சிலகாலம் கழித்து உண்மை வெளிவந்தவுடன் நிலைமை தலைகீழாய் மாறுகிறது. "சில நல்ல காரியங்கள் நடைபெற பொய் சொன்னால் தவறில்லை" என்ற பொய்யான உலகத்திலே நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. பொய்யை வச்சி வாழ்க்கையை ஓட்டலாம் ஆனா அதுல சமாதானம் இருக்காது. உங்க lifeல தேவசமாதானம் வேணும்னா நீங்க பொய்யை வெறுத்து, எந்த சூழ்நிலையாய் இருந்தாலும் உண்மையையே பேச தீர்மானம் எடுங்க.

## செய்யும் வேலைகளில் உண்மை

நண்பர்களே.. இப்போ மிகவும் முக்கியமான காரியத்தை குறித்து நாம பேசப்போகிறோம். ஆம், வேலையில் உண்மை. இதை படித்துக்கொண்டிருக்கிற நீங்களும் வேலைக்கு செல்லுகிறவர்களாக இருக்கலாம். நாம் பணிபுரியும்போது நம்முடைய வேலை ஸ்தலத்தில் நம்மை கண்காணிக்க அலுவலகத்தில் யாரும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் தேவனோ நம் செய்யும் வேலையில் எந்த அளவிற்கு உண்மையாய் இருக்கிறோம் என்பதையே நோக்கி பார்க்கிறார். சில நேரங்களில் தவறுதலாய் மாறும் கணக்குகள், அலுவகத்தில் பணத்தை செலுத்துமாறு கொடுக்கப்பட்டும் அதைகாலம் தாழ்த்துதல் போன்ற காரியங்கள் ஒருவரை கர்த்தர் தங்கள் கையின் பிரயாசத்தின்படி ஆசீர்வதிக்க முடியாமல் போகச்செய்கிறது.

செய்யும் வேலைகளில் பொறுப்புடனும், கவனமாய் செய்யும் நல்ல உக்கிராணக்காரனையே கர்த்தர் ஆசீர்வதிக்கப் பிரியப்படுகிறார். சில நேரங்களில் வேளையில் நாம் ஏதேனும் தவறு செய்யும்போது அதனை ஒப்புக்கொண்டு மன்னிப்புக்கேட்பது நல்ல பண்பாகும். மாறாக தான் தப்பித்தால் போதும் என்று சுயநலமாய் யோசித்து, பிறர் மீதோ அல்லது உபகரணங்கள் மீதோ பழியை சுமத்தி வழுவிப்போகும்போது அது நெடுநாள் நீடிக்காமல் ஒரு நாள் அந்த தவறை செய்தவரை அது காட்டிக் கொடுக்கிறது

"**வேலையின் உயர்வு உண்மையில் இருக்கிறது.**" உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களை பெறுவான் (நீதிமொழிகள் 28:20) என்று எழுதப்பட்டிருக்கிறது. அதின்படியே செய்வார். ஒருவேளை நீங்கள் இன்னும் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கலாம். நீங்கள் இருக்கும் இடத்தில், கொடுக்கப்பட்டிருந்த பொறுப்பில் கவனமாய் செய்யும் போது கர்த்தர் அநேக திறவுகோல்களை உடையவராக (Keyperson) மாற்றுவார். உண்மையுள்ளவனுக்கு தான் எதிர்பார்க்கும் உயர்வும் அதிகாரமும் தானாய்கடந்து வரும். "**அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்**" (மத்தேயு 25:21) என்று சொல்லப்பட்டிருக்கிறபடி கொஞ்சத்தில் உண்மையாய் இருப்பது நம்மை பெரியதரிசனங்களை நிறைவேற்றநம்மை நடத்திச்செல்லும்.

ஒருவேளை நீங்களும் வெகு நாட்களை உண்மையாய் இருந்து இன்னும் அதற்குரியப் பலனை அடையாமற் இருக்கலாம். கவலைப்படவேண்டாம். உங்களின் உயர்வு வெகு சீக்கிரத்தில் உள்ளது. ஆகவே நம்பிக்கையுடன் தரித்திருங்கள்.

## பொருளாதாரத்தில் உண்மை


சிறிய தொகையோ பெரிய தொகையோ கிடைக்கும் வருமானத்தில் நாம் எந்த அளவிற்கு உண்மையாய் இருக்கிறோம் என்பதை கர்த்தர் பார்க்கிறார். நம்மிடம் இருக்கும் சிறிய பணத்தை எவ்வாறு கையாளுகிறோம் என்பதை தேவன் கவனித்து பார்க்கிறார். சிறுவயது முதல் என்னை என்னுடைய பெற்றோர் கர்த்தருக்கு கொடுப்பதில் உண்மையாய் இருக்க எனக்கு கற்றுக்கொடுத்தனர். ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது என்று (1 நாளாகமம் 29:12) சொல்லியிருக்கிறப்படி இதுவரையிலும் கர்த்தருக்கென்று கொடுக்கும் காரியத்தில் உண்மையாயிருக்க ஆண்டவர் கிருபை செய்தார். கர்த்தரின் காரியத்தில் உண்மையுள்ளவர்கள் குறைவுபட்டு போகமாட்டார்கள். எல்லாவற்றிக்கும் மேலாக அவர் கைகளின் சுத்தத்தை எதிர்பார்க்கிறார். கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே கர்த்தருடைய பர்வதத்தில் ஏற முடியும். (சங்கீதம் 24:3) இன்னும் அநேக வாலிபர்கள் தாங்கள் கர்த்தருக்கென்று கொடுக்கும் காரியத்தில் கவனமாய் இல்லாதது வேதனை அளிக்கிறது. நல்ல வேலையை கொடுத்த தேவனை கனப்படுத்தாமல் தங்கள் சுய காரியங்களையே பார்த்துக்கொள்கின்றனர். நீங்க இப்போதான் படித்து முடித்து வேலைக்கு செல்ல start பண்ணி இருக்கீங்கனா, உங்களுடைய சம்பளத்தில் கர்த்தருக்கென்று ஒரு பங்கை எடுத்து வையுங்கள். நீங்க இந்த காரியத்தை இந்த வயதிலேயே செய்யும் போது உங்களின் எதிர்காலத்தை கர்த்தர் அபரிதமாக ஆசீர்வதிப்பார். கடன் வாங்கிறவர்களாய் இராமால் பிறருக்கு கொடுத்து உதவும் உதாரண குணமுள்ளவர்களாய் மாறுவோம்.

## ஆவிக்குரிய வாழ்க்கையில் உண்மை

கடைசியாக நமது ஆவிக்குரிய வாழ்வில் உள்ள உண்மைத்துவத்தை பற்றி சற்று யோசிப்போம். தேவன் கொடுத்த விலையேறப்பெற்ற இரட்சிப்பை நாம் எவ்வாறு காத்துக்கொள்கிறோம். அனுதின இரட்சிப்பிற்கு நேராக நம்முடைய பயணம் எந்தளவு உள்ளது? தேவனுடைய ஆவியை இருதயங்களில் பெற்ற நாம் இன்னும் அசுத்தமான காரியங்களில் பிடிபட்டிருப்பது ஏன்? நம் ஆவிக்குரிய வாழ்விலே தேவபக்தியும் உள்ளது, அதேசமயம் உலகத்தின் ஆசாபாசங்களின் தாக்கமும் நிறைந்துள்ளது. நம்மில் அநேகர் ஞாயிற்றுக்கிழமையிலும் திருவிருந்து ஆராதனையின் போதும் கர்த்தரின் பேரில் பயபக்தியுள்ளவர்களாய் இருக்கிறோம். ஆனால் திங்கள் முதல் சனிக்கிழமை இரவு வரை நம் ஆவிக்குரிய வாழ்வின் நிஜ நிலைமை என்ன? வாரத்தின் முதலாம் நாள் உண்மையில் துவங்கி ஏழாவது நாள் பொய்யான வாழ்விலே சிக்கிக்கொள்கிறோம். ஞாயிறு ஆராதனை வேளையில், "நான் இனி இந்த தவறை செய்ய மாட்டேன்" என்று அவருடைய சமூகத்தில் அறிக்கையிட்டு அர்பணிக்கிற நாம் அந்த தீர்மானத்தை ஏன் சிலமணி நேரங்களிலேயே விட்டுவிடுகிறோம்? அப்படியென்றால் அதன் அர்த்தம் என்ன? ஆராதனையில் எடுத்த அர்ப்பணிப்பு உண்மையா? அல்லது அதற்குபின் இடறி விழும் நிலைமை உண்மையா? தேவனுக்கு பிரியமில்லாததை நான் செய்வதில்லை என்று கூறிவிட்டு சூழ்நிலைகளால் நாம் அந்த பாவத்தை மீண்டும் செய்கிறோமே. ஒவ்வொரு முறை நாம் மனம்திரும்பி ஒப்புரவாகும்போதும், பிதாவாகிய தேவன் நம்மீது நம்பிக்கை வைக்கிறார். நாம் நம் அறிக்கையின்படி உண்மையுள்ளவர்களாய் இருப்போம் என்று எதிர்பார்க்கிறார். ஆனால் அறிக்கைக்கு பின்பு நம்மால் உறுதியாய் நிற்க முடியாமல் தள்ளாடி விழுகிறோம்.

இப்படி நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் உண்மையும் பொய்யும் கலந்து மாறி மாறி வரும்போது தேவன் நம்மை எவ்வாறு பிசாசின் இராஜ்ஜியத்தை எதிர்த்து நிற்க நம்மை பயன்படுத்த முடியும்? நல்ல கவனியுங்க நண்பர்களே, **உண்மையுள்ளவர்களை தான் ஆண்டவர் நம்பி தம்முடைய ராஜ்ஜிய பணிக்கென்று பயன்படுத்துவார்.** என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன் (1 தீமோத்தேயு 1:12)

ஆம், நண்பர்களே இன்றைக்கு ஒரு உறுதியான முடிவை எடுப்போம், நம் வாழ்க்கையில் உள்ள உண்மையற்ற காரியங்களை அகற்றிவிட்டு சுத்தமான இருதயத்தை தர மன்றாடுவோம். ஜெபத்திலும், ஆராதனையிலும், வேத வாசிப்பிலும், பரிசுத்த வாழ்விலும் கறைதிரை இல்லாதவர்களாய் மாறுவோம். தேவ சேனையாய் எழும்புவோம்!!






# செங்கல்பட்டில் பின்மாரி எழுப்புதல் உபவாச ஜெபம்

தேவனாகிய கர்த்தர் தம்முடைய தாசனுக்கு கொடுத்த தரிசனத்தின்படி கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் செங்கல்பட்டு மாவட்டத்தில் ‘‘பின்மாரி எழுப்புதல் உபவாச ஜெபம்’’ நடைபெற்று வருகிறது. கடந்த ஜுலை மாதம் 15ம் தேதி நடைபெற்ற உபவாச ஜெபத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தின் போதகர்கள், ஆராதனை வீரர்கள் மற்றும் விசுவாசிகளோடு இணைந்து நமது இந்திய தேசத்திற்காகவும், மாவட்டத்தின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.




விசேஷமாக உலகம் முழுவதையும் தன் ஆளுகைக்குள் கொண்டு வருகிற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தினால் *(Artificial Intelligence)* வரும் விளைவுகளையும், கர்த்தருடைய வேதத்திற்கு எதிராக செயல்படும் தீமையான காரியங்கள் தடுக்கப்படும்படியாக பிரார்த்தனை செய்யப்பட்டது. மேலும் டெல்லி மழையினால் பாதிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் பாதுகாக்கவும், மழையினால் உயிர்சேதங்கள் ஏற்படாத படிக்கும், மணிப்பூரில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற கிறிஸ்தவர்களுக்கு எதிரான கொடுமைகள், வன்முறைகள் ஒழிந்து தேவன் சமாதானத்தைத் தர வேண்டும் என்று பாரத்தோடு அழுது ஜெபிக்கவும், திறப்பின் வாசலில் நின்று ஜெபிக்கவும் தேவன் பெலன் தந்தார். தேசத்தில் உள்ள அந்தகார கிரியைகள், கொலைவெறியைத் தூண்டுகிற ஆவிகளுக்கு விரோதமாகவும் பிசாசின் கோட்டைகளைத் தகர்த்தெரியும் வல்லமையான யுத்த ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது.

ரூஹா குழுவினர்கள் துதி ஆராதனையில் ஜனங்களை நடத்தினார்கள். போதகர் ஆல்வின் தாமஸ் அவர்கள் ஜெபத்தை நடத்தி, ‘‘கர்த்தர் உங்களுக்காக கிரியைச் செய்யும் வேளை வந்தது’’ என்ற வல்லமையான தீர்க்கதரிசன செய்தியை பகிர்ந்து கொண்டார். மேலும் வந்திருந்த ஒவ்வொருவரின் விடுதலைக்காகவும் அற்புதத்திற்காகவும் ஜெபித்தபோது, கர்த்தர் அநேகரை பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலையாக்கினார். **‘‘தேசத்தில் பின்மாரி எழுப்புதல் உண்டாக வேண்டும்’’ என்று மிகுந்த ஜெபத்தோடு நடத்தப்படும் இக்கூட்டங்களுக்காகவும் வருகிற நாட்களில் தமிழ்நாடு முழுவதும் பின்மாரி உபவாச ஜெபங்கள் நடத்தப்படவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.**

### அசுத்த ஆவியிலிருந்து விடுதலை



என்னுடைய தாயர் இறந்து ஒரு வருடமாகிறது. அதிலிருந்து என் மகள் ராகவி அசுத்த ஆவியின் போராட்டத்தினால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்தாள். ஒழுங்காக படிக்கமாட்டாள். சரியாக சாப்பிடுவதில்லை. அடிக்கடி தலைவலியினால் கஷ்டப்படுவாள். ஏதோ ஒரு விதமான மனக்குழப்பத்தோடே எப்பொழுதும் இருப்பாள். அவளைக்குறித்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். ஆகவே இந்த கூட்டத்திற்கு என் மகளை ஸ்கூல்க்கு லீவு போட்டு அழைத்துக் கொண்டு வந்தேன். ஜெபிக்கும்போதே அவளுக்குள்ளிருந்த பிசாசு அலறியது. போதகர் என் மகளை அழைத்து ஜெபித்த போது என் மகளுக்கு கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். ‘‘இனி உன் பெயர் எஸ்தர், நீ கர்த்தருக்காய் பெரிய காரியங்களைச் செய்வாய்’’ என்று சொல்லி ஆசீர்வதித்தார். கர்த்தருக்கே மகிமை!

### மனவிருப்பத்தை நிறைவேற்றினார்

எனக்கு திருமணமாகி 11 வருடங்கள் ஆகிறது. இதில் 9 வருடங்கள் என் கணவர் வெளியூரில் வேலைப் பார்த்து வருகிறார். நான் கடந்த ஜுன் மாதம் பின்மாரி எழுப்புதல் உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டு, மிகுந்த பாரத்தோடு கணவரின் வேலை இட மாறுதலுக்காகவும், நாங்கள் குடும்பமாய் இணைந்து கர்த்தரை ஆராதிக்க வேண்டும் என்று ஜெபித்தேன்.



கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு என் கணவருக்கு சென்னையில் வேலை இடமாறுதலைக் கொடுத்தார்.

– சகோதரி நளினி




**ஆகஸ்ட் மாதம் 2வது சனிக்கிழமை (12.08.2023) செங்கல்பட்டு, ஆலப்பாக்கம் ரோட்டில் உள்ள பிரின்ஸ் மஹாலில் வைத்து காலை 9.30 மணி முதல் 2.00 மணி வரை நடைபெறும். தவறாமல் கலந்து கொள்ளுங்கள். (மதிய உணவு உண்டு)**

# எழுப்புதலுக்காய் 24/7 ஜெப மையத்தை எழுந்து கட்டுவோம் வாருங்கள்





தேவனுடைய பிள்ளைகளே, இது கடைசி காலம்! எழுப்புதலின் நேரம்!! ஆண்டவர் சபைகளையெல்லாம் மாபெரும் எழுப்புதலின் அறுவடைக்கு ஆயத்தமாகிக்கொண்டு வருகிறார். ப்ரீஸ் பெருவிழாக்கள் மூலமாக ஏராளமான வாலிபர்களை ஆண்டவருடைய ஊழியத்தை செய்வதற்காக எழுப்புவது, போதகர்கள் மிஷனெரிகளை யோசுவாவின் சேனை என்ற கருத்தரங்கு மூலமாக உருவாக்குவது, அற்புத பெருவிழாக்கள், பத்திரிக்கை ஊழியம், தொலைக்காட்சி ஊழியம், எக்காள பண்டிகை, ஒவ்வொரு மாநிலத்திற்கும் பட்டணத்திற்கும் சென்று, ஜனங்களுக்காக திறப்பில் நின்று, தேவனுடைய ராஜ்யம் வருவதாக என்று பிரகடனப்படுத்தி ஜெபித்திருக்கிறோம். இப்பொழுதும் ரூஹா ஊழியத்தின் மூலமாக தேவன் செய்யப்போகிற காரியங்களுக்கு கீழ்படிந்து எழுப்புதல் மையத்தைக் கட்டும்படி ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம்.

24 மணி நேரமும் துதித்து, ஜெபித்து, திறப்பிலே நின்று, "ஆண்டவரே! எங்கள் தேசத்தை சந்தியும்" என்று எலியாவைப் போல முழக்கமிட ஒரு கர்மேல் பர்வதம் நமக்குத் தேவை. அக்கினிமயமான நாவுகள் இறங்கி வந்த மேல்வீட்டறை தேவை. நாம் வாங்கப்போகிற ரூஹா எழுப்புதல் மையமானது, பல தேசங்களிலிருந்து வருகிற இளம் வாலிபர்களை வார்த்தையிலும் மீடியாவிலும் ஆராதனையிலும் கூர்மையான ஆயுதங்களாக உருவாக்கும் ஒரு எழுப்புதல் பட்டறையாக இருக்கும்.

அப்படிப்பட்ட ஒரு இடத்தை ஆயத்தம்பண்ணும்படியாக தேவன் நமக்கு ஒரு இடத்தைக் காண்பித்திருக்கிறார். 16 ஆண்டுகளுக்கு பிறகு தாவீதின் நகரமாக, சீயோன் கோட்டையாக தேவன் தரப்போகிறார். எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று நெகேமியா அறைகூவல் விடுத்தபோது, ஜனங்கள் எழும்பி வந்து அலங்கத்தைக் கட்டினது போல, நீங்களும் எங்களோடு கூட இணைந்து கடைசி எழுப்புதலுக்காக, தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்ட எங்களோடு இணையும்படி அன்பாய் கேட்டுக்கொள்கிறோம்.

தேவனுக்காக வைராக்கியமாய் நிற்கும்போது, தேவன் உங்களையும் உங்கள் வீட்டையும் கட்டுவார். பரலோகத்தின் தேவனானவர் உங்களுக்கு காரியத்தைக் கைக்கூடி வரப்பண்ணுவார். ஆகவே வாருங்கள் எழுந்து கட்டுவோம். உங்கள் மனதிலே ஆண்டவர் இந்த எழுப்புதல் மையத்திற்காக என்ன விதைக்கச் சொல்லுகிறாரோ அதை விதையுங்கள். தேவனுடைய ராஜ்யத்திற்க்கென்று உற்சாகமாய் விதையுங்கள்.

ஒரு சதுர அடியின் விலை ரூபாய் 2500 என்று கணக்கிடப் பட்டுள்ளது. நீங்கள் குடும்பமாகவோ, சபையாகவோ அல்லது ஜெபக்குழுவாகவோ சேர்ந்து எழுப்புதலுக்காக விதைக்கலாம்.

எழுப்புதலுக்காக எனது பங்கு

- ☐ ஒரு சதுர அடி ரூ.2500
- ☐ 4 சதுர அடி ரூ 10000
- ☐ 10 சதுர அடி ரூ 25000
- ☐ எனது பங்கு ரூ________

பொருத்தனையோடு விதையுங்கள். ஆண்டவருடைய ஆலயத்தைக் கட்ட வேண்டுமென்று தாவீது விரும்பினபோது, தேவன் தாவீது ஒரு நிலையான வீட்டைக் கட்டினார். அவனுடைய ராஜ்யபாரத்தை ஸ்திரப்படுத்தினார். அதுபோல எழுப்புதலுக்காக வைராக்கியம் பாராட்டி, பொருத்தனை செய்து விதைக்கிற உங்களையும் கர்த்தர் நிச்சயம் ஆசீர்வதிப்பார்.

உங்களுடைய உதாரத்துவமான காணிக்கைகளை Cheque / DD/ Money Order மூலமாக அனுப்ப விரும்பினால் Ruah Ministries Buliding Fund என்ற பெயரில் அனுப்பலாம். அல்லது கீழே உள்ள QR Code ஐ பயன்படுத்தி Googlepay / Phonepe மூலமாக அனுப்பலாம். உங்கள் விதைகளை நீங்கள் அனுப்பிய பிறகு 9884901777 என்ற எண்ணிற்கு வாட்சப் மூலமாகவோ அல்லது தொலைப்பேசி மூலமாகவோ தொடர்பு கொண்டு கட்டாயம் தெரிவிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**1 Account Details** வங்கிக்கணக்கு

| | | |
|---|---|---|
| ACC. NAME | RUAH MINISTRIES | RUAH MINISTRIES BUILDING FUND |
| ACC. NUMBER | 05741450000037 | 50200033712782 |
| BANK NAME | HDFC Bank | HDFC BANK |
| BRANCH NAME | Kodambakam | Kodambakkam |
| IFSC CODE | HDFC0000574 | HDFC0000574 |

**2** Google Pay / Phone Pe

**9444150777**

**3 Cheque Favour Name:**

- Ruah Ministies
- Ruah Ministries Building Fund

**4 E.M.O** மணி ஆர்டர்

To Address: Ps. Alwin Thomas
82, Jawaharlal Nehru Salai,
Vadapalani, Chennai - 26, 9884710777

*Scan here to Donate*

நீங்கள் பணம் செலுத்தியபின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் எந்த ஊழியத்திற்காக நீங்கள் காணிக்கை அனுப்பியிருக்கிறீர்கள் என்ற விவரங்களை **9884901777** என்ற எண்ணிற்கு வாட்சப் மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

# நெசா தோண்டு நிறுவனத்தின் மூலமாக நடைபெற்ற சமுதாய பணிகள்:

NESSA

I am a Miracle

Regd No: 203/2013 A Registered Charitable Trust



நமது நெசா தொண்டு நிறுவனத்தின் மூலமாக ஏழை எளிய மக்களுக்கு ஒவ்வொரு நாளும் மதிய உணவு மற்றும் அநேக நலத்திட்ட உதவிகளைச் செய்து வருகிறோம். அநேகருடைய பேராதரவினாலும் நன்கொடைகளினாலும் இந்த தொண்டு நிறுவனத்தின் மூலமாக அநேகர் பயனடைந்து வருகின்றனர்









## முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு மதிய உணவு

நமது நெசா தொண்டு நிறுவனத்தின் மூலமாக ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் சென்னையில் உள்ள முதியோர் இல்லங்களுக்கு சென்று அங்குள்ள முதியோர்களுக்கு மதிய உணவுகளை வழங்கி வருகிறோம். முதியவர்களுக்கு தேவையான காய்கள் நிறைந்த தரமான நல்ல ஊட்டசத்து மிகுந்த உணவுகளை கொடுத்து அவர்களை விசாரித்து வருகிறோம்.

## ஏழை மாணவர்களுக்கு இலவச டியூசன்

நமது நெசா தொண்டு நிறுவனத்தின் சார்பில் சென்னை ராணி அண்ணா நகர், அம்பத்தூர் (கள்ளிக்குப்பம்), செங்கல்பட்டு ஆகிய இடங்களில் வசிக்கும் குடிசைவாழ் பகுதியில் உள்ள சிறுவர்களுக்கு இலவச டியூசன் நடத்தப்பட்டு வருகிறது. இதில் சுமார் 150க்கும் மேற்ப்பட்ட குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்படுகிறது. கடந்த வருடத்தில் மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெற்று தேர்ச்சியடைந்திருக்கின்றனர்.







## நெசா அற்புத பெட்டகம்

ஒவ்வொரு மாதமும் ஆதரவற்ற விதவைத் தாய்மார்களுக்கும், ஏழைக்குடும்பங்களுக்கும் ஒரு மாதத்திற்கு தேவையான அரிசி, பருப்பு, எண்ணெய் போன்ற மளிகைப்பொருட்களை வழங்கி வருகிறோம். கடந்த மாதம் செங்கல்பட்டு பகுதியில் உள்ள சுமார் 150 குடும்பங்களுக்கு நெசா அற்புத பெட்டகத்தை வழங்கியிருக்கிறோம். ஒரு குடும்பத்திற்கு வழங்க சுமார் 1000ரூபாய் வரை செலவாகிறது. நீங்களும் ஒவ்வொரு மாதமும் ஏழை விதவைகளையும், கணவரால் கைவிடப்பட்டவர்களையும் போஷிக்க உங்கள் கரங்களை நீட்டும்படி அன்பாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

## மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை

ஒவ்வொரு வருடமும் செய்து வருகிறபடியே, இந்த கல்வியாண்டிலும் படிக்க வசதியில்லாத, பள்ளிக்கட்டணம் செலுத்த முடியாத ஏழை மற்றும் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்விக்கட்டணத்தை செலுத்தி, படிக்க வைக்க திட்டமிட்டுள்ளோம். அதுமட்டுமல்லாது அடுத்த மாதம் வட இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் உள்ள குக்கிராமங்களில் வசிக்கிற மாணவர்களுக்கும் படிப் பதற்குத் தேவையான உபகரணங்களை வாங்கிக்கொடுக்க இருக்கிறோம். இந்த நல்ல காரியத்தில் உங்களுடைய பங்கும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். உங்களால் முடிந்த நன்கொடைகளை அனுப்பி எதிர்கால தலைமுறையினரின் வாழ்க்கை முன்னேற்ற உதவுங்கள். உங்களுடைய ஈகைக்குணத்திற்காக தேவன் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார்.

உங்கள் நன்கொடைகளை NESSA TRUST என்ற பெயரில் Cheque/ DD மூலமாகவோ அல்லது கீழ்கண்ட முகவரிக்கு மணிஆர்டர் மூலமாகவோ அனுப்பலாம். மிகவும் எளிதாக அனுப்ப QR Codeஐ ஸ்கேன் செய்து GooglePay வழியாக அனுப்பலாம். உங்கள் நன்கொடைகளை அனுப்பியதும் 9884901777 என்ற எண்ணைத் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

Account Name : Nessa Trust
Banker's Name : HDFC Bank
Account No : 50200002673830
Branch : Kodambakkam
IFSC Code : HDFC0000574

www.nessatrust.org

# தூத்துக்குடி பேரின்ப பெருவிழா

தூத்துக்குடி முழு இரவு ஜெப ஐக்கியத்தின் குழுவினர்கள் தூத்துக்குடி மாவட்டத்தின் எழுப்புதலுக்காக கடந்த 33 வருடங்களாக பல பிரசங்கியார்களையும் தேவ மனிதர்களையும் அழைத்து, படைமுயற்சி கூட்டங்களை நடத்தி வருகிறார்கள். ஒவ்வொரு வருடமும் நடைபெறுகிற இந்த பேரின்ப பெருவிழா மூலமாக பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள், அநேகர் தெய்வீக சுகத்தையும் விடுதலையையும் பெற்றிருக்கிறார்கள். மிகுந்த பிரயாசத்தோடு வருடந்தோறும் பேரின்ப பெருவிழாவை நடத்தி வரும் **டாக்டர் ஜோ பிரபாகரன்** மற்றும் அவர்கள் குழுவினரைக் கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!

கடந்த ஜுன் 4,5 ஆகிய தேதிகளில் நடைபெற்ற தூத்துக்குடி பேரின்ப பெருவிழாவில் நமது சகோதரர் கலந்து கொண்டு துதி ஆராதனையோடு, தேவ வார்த்தையை பிரசங்கித்தார்கள். முதல் நாளில் உங்களை பின் தொடர்ந்து வருகிற எகிப்தியனை இனி காணமாட்டீர்கள் என்ற தலைப்பில் தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். தேவ பிள்ளைகளைப் பின் தொடர்ந்து வருகிற சாபங்கள், வியாதிகள், கடன் என்கிற கட்டுகளை உடைத்து விடுதலையின் ஜெபத்தை ஏறெடுத்தப்போது அநேகர் அற்புதங்களையும் தெய்வீக சுகத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.

இரண்டாம் நாளில், "தேவனுடைய சத்தம் கேட்கிறதா?" என்ற கேள்வியோடு ஆரம்பித்து, உங்கள் வாழ்க்கையில் தேவன் திருப்புமுனையின் சத்தத்தை தொனிக்கப்பண்ணுகிறார். அந்த சத்தத்தைக்கேட்டு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று தீர்க்கதரிசனமாக பேசினார். மேலும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் எக்காள சத்தத்தைக்கேட்க உங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளுங்கள் என்று சொல்லி, ஜனங்களை ஆயத்தப்படுத்தினார். அநேகர் தங்களுடைய வாழ்க்கையை இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தார்கள்.















### பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலை!

நான் கடந்த ஒரு வருடமாக மூச்சுத்திணறல் பிரச்சனையினால் மிகவும் பாதிக்கப்பட்டேன். இதனால் நான் இறந்துவிடுவேனோ? என்ற மரண பயம் எனக்குள் இருந்தது. மனதில் சமாதானம் இல்லாமல் பிசாசு போராட்டத்தினால் வேதனையில் வாழ்ந்து கொண்டிருந்தேன். இந்த சூழ்நிலையில் நான் பேரின்ப பெருவிழாவில் கலந்து கொண்டேன். ஜெப வேளையில் போதகர் என்னை மேடைக்கு அழைத்து, எனக்காக பாரத்தோடு ஜெபித்தபோது, அலைக்கழிக்கப்பட்டு கீழே விழுந்தேன். அப்பொழுதே பிசாசின் போராட்டத்திலிருந்து கர்த்தர் எனக்கு விடுதலையையும் சுகத்தையும் கொடுத்தார். கர்த்தருக்கே மகிமை!

### வயிற்று வலியிலிருந்து சுகம்!



சில நேரங்களில் ஏற்படும் தாங்கிக்கொள்ள முடியாத வயிற்றுவலியினால் நான் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். மேலும் என் குடும்பத்தில் சமாதானமற்ற சூழ்நிலையினால் மனம் உடைந்து போனேன். மிகுந்த கவலையோடு இக்கூட்டத்தில் கலந்து கொண்டேன். அப்பொழுது போதகர் என்னை மேடையில் அழைத்து, "சகோதரியே.. உங்கள் யுத்தம் முடிந்தது, இனி உங்களை பயமுறுத்துகிற எகிப்தியனை காணமாட்டீர்கள், நீங்கள் இழந்தவைகளைத் திரும்பும் பெற்றுக்கொள்ளுவீர்கள், கர்த்தர் உங்களை சாட்சியாக நிறுத்துவார், உங்கள் பெலவீனத்தைக் கர்த்தர் சுகமாக்கி, உங்களை நிமிர்ந்து நடக்கப்பண்ணுவார்" என்று சொன்னார். அந்த நேரமே கர்த்தர் எனக்கு வயிற்று வலியிருந்து சுகத்தைக்கொடுத்தார். தேவனுக்கு நன்றிகளைச் செலுத்துகிறேன்!

Registered Newspaper RNI No. TNTAM/2010/36309 | Postel Regd.No. TN/CC(S)DN/411/23-25
Licensed to Post WPP No.TN/PMG(CCR)WPP-585 / 2023-2025 Published on 1st week of Every Month
Posted between 25-31 July2023 | Posted at RMS Egmore Patrica Channel


# இஸ்ரேல் உடன்படிக்கை பயணம்

**செப்டம்பர் 12 முதல் 20 வரை**

**குறைந்த கட்டணம்....**
**இன்றே முன்பதிவு செய்யுங்கள்.**



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிறந்து, வளர்ந்து மரித்து உயிர்த்தெழுந்து அவர் உலாவின இடத்தில் நீங்கள் உலாவிட..., அவர் சுவாசித்த காற்றை நீங்களும் சுவாசித்திட... மேல்வீட்டறையில் ஊற்றப்பட்ட விலையேறப் பெற்ற அபிஷேகத்தைப் பெற்றிட... வாருங்கள்.

**மேலும் விபரங்கட்கு +91 9884901777 | +91 9444150777**



## உங்கள் ரூஹா டிவியில் காணத்தவறாதீர்கள்! ரேமா வார்த்தை

கர்த்தருடைய வார்த்தையினால் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, ஒவ்வொரு நாளுக்கும் தேவையான கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தையை நமது போதகர் ஆல்வின் தாமஸ் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்த வார்த்தையானது சோர்ந்து போயிருக்கும் ஆத்துமாக்களை உற்சாகப்படுத்தும் கர்த்தருடைய வார்த்தை.

30 வினாடி ரேமா வார்த்தை உங்களுக்கு வேண்டுமென்றால் 9884901777 என்ற எண்ணிற்கு <Daily Rhema Word> என்று டைப் செய்து அனுப்பும்போது, உங்களுக்கு தினமும் அனுப்பி வைக்கப்படும். நீங்கள் தினமும் இந்த ரேமா வார்த்தையை **WhatsApp Status** வைத்து, உங்கள் உறவினர்களுக்கும் அனுப்பி சுவிசேஷத்தை அறிவியுங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

| CABLE NETWORKS | CHANNEL NO |
|---|---|
| SCV | 182 |
| TCCL | 745 |
| JAK | 101 |
| Aristo | 612 |

DIGITAL PLATFORMS: YouTube, Roku TV, amazon fireTV, Jio Fiber Set top box, Google Play, App Store


*If Undelivered please Return to:*

**RUAH SUVASA KATRU**
No. 82, 100 Feet Road,
Vadapalani, Chennai,
Tamil Nadu 600026

To